பக்கங்கள்: பன்னிரண்டு

tered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 08 | வெள்ளிக்கிழமை | (21-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 154

## முல்லைத்தீவு கடற்பகுதியில் இரவுநேரத்தில்

# பறப்பில் ஈடுபட்ட புலிகளின் விமானம் ராடர் கருவியில் பதிவாகியிருக்கிறது

## கடற்படை வட்டாரங்கள் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானமொன்று சில தினங்களுக்கு முன்னர் பறப்புப்பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாகக் கடற்படை வட்டாரங்கள் பரபரப்பான தகவலை வெளியிட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை இரவு எட்டு மணியளவில் புலிகளின் மேற் படி விமானம் கடற்படையினரின் றாடர் கருவியில் பதிவாகியுள்ளதாக கடற்படை அதிகாரிகளை மேற்கோள் காட்டி கொழும்புப்பத்திரிகையொன்று நேற்றுச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த திங்கட்கிழமையிரவு முல்லைத்தீவையண்டிய கடற்பகுதியில் 12 கடல் மைல் தொலைவுவரை விடுதலைப் புலிகளின் விமானம் பறப்பில் ஈடுபட்டிருக்கிறது. இந்த விமானம் கடற்படைத் தலைமையகத்தில் அமைந்துள்ள றாடரில் தெளிவாகத் தென்பட்டிருக்கிறது.

இவ்விமானம் முல்லைத்தீவுக் கரையில் இருந்து கடலை நோக்கி 12 மைல்கள் சென்று பின்னர் அங்கிருந்து திரும்பி நிலப்பகுதியை நோக்கிச் சென்று றாடரில் இருந்து மறைந்துவிட்டது. மேற்படி மர்மப் பறப்பு சாதனம் 150 நொட்ஸ் வேகத்தில் பயணம் செய்திருக்கிறது.150 நொட்ஸ் வேகத்தில் பயணித்திருந்த காரணத்தினால் அது ஹெலிகொப்டருக்குச் சமனானதாகவோ அல்லது செஸ்னா ரக விமானமாகவோ இருக்கலாம்.

இந்த மர்மப் பறப்புச் சாதனம் கடல் விமானம்தான் என்பதை அடித்துக்கூற முடியவில்லை. மர்மசாதனம் பறந்த வேகத்தையும் திசையையும் அது திரும்பிச் சென்ற இடத்தையும் வைத்து ஒப்பிட்டு நோக்குகையில் விடுதலைப் புலிகளுடைய விமானம்தான் என்பதை ஊகித்தறிவது அவ்வளவு கடினமல்ல.

மேற்படி விமானம் பறப்பில் ஈடுபட்ட கடந்த திங்கள் இரவு(12ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் மீண்டுமோர் யுத்தத்தை புலிகள் ஆரம்பிக்க மாட்டார்கள்

## பிரதமருடனும் டக்ளஸ் டனும் ஜே.வி.பி.தலைவர் சந்திப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

சமாதான முயற்சிகள் தொடர்பில் கையாளப்பட்டுவரும் நடைமுறைகள் குறித்து சோமவன்ச தமது கட்சியின் நிலைப்பாட்டை பிரதமருக்கு எடுத்து விளக்கி இருக்கிறார்.

விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதியின் நிலைப்பாட்டிற்கு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ள அவர் இது விளடயம் தொடர்பாக (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.பொதுக் கூட்டத்திற்கு இம்முறை ஜனாதிபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு இம் முறை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வழைப்பை ஏற்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் கூட்டத்தல் கலந்து கொள்வதற்காக எதிர் வரும் செப்டம்பர் மாத நடுப்பகுதியளவில் ஜனாதிபதி நியுயோர்க் செல்லவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மட்டுமே அனுப்பப்பட்டிருந்தது.

இவ்வழைபபு தனக்கு அனுப்பப்பாமைக்கு, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி சார்லி (12ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மத்தியில் புலித்தேவன்

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டமைப்பில் பலம் பொருந்தியவர்களாக இருப்பது போல சிறந்த நிர்வாகக் கட்டமைப்பையும் கொண்டுள்ள நிலையில் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக் கால தன்னாட்சி அதிகார சபையின் மூலம் வடக்குக் கிழக்கைக் கட்டியெழுப்ப முடியும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் உள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களைப் புலித்தேவன் சந்தித்துப் பேசிய போதே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பாக வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் புலித்தேவன் மேலும் (12ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளிற்கும் இராணுவத்தினருக்குமிடையில் நேற்று முன்தினம் திருகோணமலை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பின் போது...

## போராளிகள் வீரச்சாவு

(கிளிநொச்சி)

தமிழீழக் கடற்பரப்பில் கடந்த முதலாம்திகதி இடம்பெற்ற பயிற்சி நடவடிக்கை ஒன்றின் போது 4 கடற் கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடறகரும்புலி மேஜர் பாண்டியன (முத்துக்குமார் கணபதிப்பிள்ளை-கரடியனாறு மட்டக்களப்பு), கடற் கரும்புலி மேஜர் சூரியன் அல்லது (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்கவே முடியாது

### ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறு ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சமாதானப் பேச்சுவார்த்தை இடம் பெறுவதை நாட்டின் எல்லா அமைப்புக்களும் விரும்புகின்றன. ஆனால் விடுதலைப் புலிகளுடன் மட்டும்தான் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## திசைமாறிய கப்பல் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிங்கப்பூரில் இருந்து காலி நோககி வந்து கொண்டிருந்த வேளை காணாமல் போன ஸ்பானியக் கப்பல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக வழிமாறிச் சென்ற மேற்படி கப்பல் மலாக்காவூடாக மடகஸ்கா நோக்கிச் சென்றுள்ளது. எனினும் துண்டிக்கப்பட்டிருந்த தொலைத் தொடர்புகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டதா (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உ ங்கள் நாளிதழ்

# நிரந்தர சமாதானம் நிலைபெறும்போது இலங்கைக்கான உதவிகளும் அதிகரிக்கும்

## பிரி.இராஜாங்க அதிகாரி யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கையில் நிரந்தர சமாதானம் நிலைபெறும் போதுதான் பிரித்தானியாவும் ஏனைய சர்வதேச நாடுகளும் இலங்கையின் அபிவிருத்திக்கான உதவிகளை வழங்க முன்வரும் என நேற்று யாழ்பாணம் வருகைதந்த பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான இராஜாங்க அதிகாரி சைமன் பொண்ட் தெரிவித்துள்ளார்.**

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் யாழ். குடாநாட்டில் நிலவும் அரசியல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றின் நிலைமைகள் தொடாபாக ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் விஜயம் செய்த சைமன் பொண்ட் மற்றும் பிரித்தானியாவின் இலங்கைக்கான தூதரகத்தின் அதிகாரி மாக்கிரட் ரென்யூவும் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற இணைய காரியாலயத்தில் விசேட சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் ஸ்ரீ.சக்திவேல் தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், கியூடெக் நிறுவனம், ஊற்றுநிறுவனம், அறவழிப் போராட்டக்குழு, மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து மேலும் கூறுகையில்,

நீண்டகாலமாக யுத்தம் நிலவி வந்த இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல் இங்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய சமாதான சூழலை உருவாக்கியுள்ளது. இந்த தற்காலிக அமைதிச் சூழ்நிலை நிரந்தரமான சமாதானமாக மாறும் போது தற்போது வழங்கப்படுவதைப்போல் பல மடங்கிலான உதவித் திட்டங்களை இலங்கைக்கு வழங்க பிரிட்டன் தயாராக உள்ளது.

எனவே இத்தகைய உதவிகளை மனநிறைவுடன் நாம் வழங்குவதாயின் இலங்கையில் சமாதானம் நிலை பெறவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச் சந்திப்பின் போது தற்போதைய அரசியல் மற்றும் இயல்பு வாழ்க்கை பிரச்சினைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அரச சார்பற்ற இணையப் பிரதிநிதிகள்,

கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இங்கு நிலவும் யுத்த நிறுத்த சூழ்நிலை மூலம் தமிழ் மக்கள் எதுவித சுகங்களையும் அனுபவிக்கவில்லை.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் மூலம் படையினரது கைதுகளும் அடாவடித்தனங்களும் குறைந்துள்ளனவே தவிர படையினரது பாதுகாப்பு வலயங்கள், பாஸ்நடைமுறைகள் போன்ற கெடுபிடிகள் ஓயவில்லை.

இவற்றால் மக்களின் மீள்குடியமர்வு, இயல்பு வாழ்வு என்பன மிக மோசமாகப் பாதிக்கபட்டுள்ளன.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களை புனர்நிர்மாணம் செய்து அப்பகுதி அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்கு அரசினால் திருப்திகரமான திட்டங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

இங்கு மேற்கொள்ளப்படுவதற்கு அரசினால் முன்வைக்கப்படும் அற்பசொற்ப அளவிலான திட்டங்கள்கூட மக்களது தேவைப்பாடுகளை மையமாகக் கொண்டிராததால் மக்களது நிலைமைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காகப் பயனாளிகளையும், பிரதேசங்களையும் தெரிவுசெய்யுமபோது கிராம சேவையாளர்கள் உரியமுறையில் செயற்படுவதில்லை. அதற்குரிய அறிவாற்றல்களும் அவர்களிடம் காணப்படவில்லை.

இவறறை கவனத்தில்கொண்டு வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கான நேர்த்தியான அபிவிருத்தித் திட்டங்களை முன்வைப்பதற்குரிய ஆலோசனைகளை இலங்கை அரசாங்கத்திற்கு பிரிட்டன் வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-16)

## கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இன்று பரிசளிப்பு

(சுதுமலை)

உலக சுகாதார நிறுவனததின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் போஷாக்கு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாடசாலை மட்டங்களில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா இடம் பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 1.00மணியளவில் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ள இப்பரிசளிப்பு விழாவில் பரிசில்களைப் பெறும் மாணவர்களின் விபரம் வருமாறு,

தரம் 9-11வரையிலான மாணவர்களிடையேயான போட்டியில் 1ஆம் இடம்: வி.லதீபன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

2ஆம் இடம்:எம்.அனோசியஸ் நவாலி மாகாவித்தியாலயம்.

3ஆம் இட்: அ.மேரி மெற்றில்டா ஆனைக்கோட்டை றோமன கத்தோலிக்கப் பாடசாலை.

உயர்தர வகுப்பு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் முதலாம் இடம்: ச.றஜிதா மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

2ஆம் இடம்: ச.கஜேந்தினி மானிப்பாய் மகளிர் கல்லூரி.

3ஆம் இடம் பி.தீபன் மானிப்பாய் இந்துக்கல்லூரி. (4,252)

## ஐ.தே.கவின் எதிர்கால நலன் கருதி தேசிய கொள்கை வகுக்க குழு நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளக ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் புதிய வேலைத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கூறிய அவர்,

சாதாரண மக்களில் இருந்து கட்சியின் உயர்பீடம் வரை கட்சியின் உள்ளக ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.இதற்கான வேலைத் திட்டத்தை தயாரிப்பதற்கு அனைத்துத் தரப்பினரது கருத்துக்களும் பெற்றுக்கொள்ளப்படும்.

கட்சியின் வாக்கு வங்கியை அதிகரிப்பது குறித்த செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளை முன்னிட்டு தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்குக் குழுவும் நியமிக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் செயற்குழுக் கூட்டத்தின் போது இதற்கான குழு தெரிவு செய்யப்படுமெனத் தெரிவிததுள்ளார். (8)

## பாராளுமன்ற அமர்வுகளை சுமுகமாக நடத்துவது பற்றி விரைவில் ஆராயப்படும்

## சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகளை சுமுகமாக நடத்துவது பற்றி ஆராய்வதற்கான அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் கூட்டமொன்றை நடத்துவதற்கு சபாநாயகர் டபிள்யு. ஜே.எம்.லொக்கு பண்டார முடிவுசெய்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஏற்பட்ட அமளிதுமளி காரணமாக நிர்ணயிக்கப்பட்ட விடயங்களைக் குறித்த காலவரையறைக்குள் பூர்த்தி செய்யமுடியாமல் போனதை அடுத்தே சபாநாயகர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

சபாநாயகர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கட்சித் தலைவர்கள் மேற்கொண்ட தீர்மானத்தை அனுசரிக்காமல் நடக்கும் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே இத்தகைய இடையூறுகள் ஏற்படுகின்றன.

எனவே ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் தத்தமது பாரம்பரியங்களையும் நிலையியல் கட்டளைகளையும் மதித்துச் செயற்படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, கந்தப் பொல அசம்பாவிதம் குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விவாதித்த போது அங்கு பெரும் அமளிதுமளி ஏற்பட்டிருந்தமை தெரிந்ததே. (60,10)

### வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளி பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை கனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 30,31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

* * *

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 31ஆம் திகதியும் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன. (8)

## பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

பின்தங்கிய பாடசாலைகளில் கற்றுவரும மாணவர்களுக்குப் பகல் உணவு வழங்கும் திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இத் தீர்மானத்தின்படி நாடு முழுவதிலும் உள்ள 3ஆயிரம் பாடசாலைகளில் பகலுணவுகள் வழங்கப்படவுள்ளன. பகுதி பகுதிகளாக பிரித்தே இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தபபடும்.

நாடு முழுவதிலும் வாழ்ந்து வரும் போஷாக்குக் குறைந்த 1லட்சத்து 20ஆயிரம் சிறார்களின் நன்மைகளைக் கருத்தில்கொண்டே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் ரெஜினோல்ட் கூரே இத்தகவலைத் தெரிவித்தார். (4,60)

### ஜயந்த தனபாலவின் நியமனத்தையடுத்து

## சமாதானச் செயலகத்தில் புதிய பல மாற்றங்கள்

சிறிலங்கா அரசின் சமாதானச் செயலகம் பரந்துபட்ட அதிகாரங்களுடன் மாற்றியமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலகத்தின் தலைவராக ஜயந்த தனபால ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இம் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன்படி, கடந்த இரண்டு வருடங்களாக செயலகத்தில் பணியாற்றி வந்தவர்கள் இம்மாத இறுதியுடன் பணி நீக்கம் செய்யப்படுவதுடன், அவர்களுக்குப் பதிலாகப் புதியவர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும நாடுகளைக கையாள்தல், நோர்வேயின் சமாதானச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகள் சமாதானச் செயலகத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அததுடன், இவையனைத்துக்கும் பொறுப்பாக ஜனாதிபதியின் கீழ் சமாதானச் செயலகத்தின் தலைவர் பரந்துபட்ட அதிகாரங்களுடன் செயற்படவுள்ளார்.

மேலும்,அரசாங்கத்தின் சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக மக்களுக்கு போதிய விளககத்தைக் கொடுக்கும் வகையில் தொடர்பாடல் சேவை ஒன்றை சமாதானச் செயலகத்தின் ஊடாக விஸ்தரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (18)

# இந்தியாவின் 12 வது பிரதமர் டாக்டர் மன் மோகன் சிங்கின் வாழ்க்கைக் குறிப்புகள்!

1932ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி தற்பொழுது பாகிஸ்தானில் உள்ள மேற்கு பஞ்சாப் மாகாணத்தில் காஹ் என்ற இடத்தில் மன்மோகன் சிங் பிறந்தார்!

இவரது தந்தை பெயர் துர்முக் சிங். தாயார் அம்ரிட் கௌர்.



1958ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி குர்ஷாரன் கௌர் மன்மோகன் சிங் மணந்து கொண்டார். மன் மோகன் - குர்ஷாரன் கௌர் தம்பதிக்கு 3 மகள்கள் உள்ளனர்.

பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். அதன் பிறகு ஆக்ஸ்்.போர்ட் பல்கலையில் பொருளாதாரதில் டி.்.பில் பெற்றார். கேம்பிரிஜ், ஆக்ஸ்்.போர்ட் பல் கலைக்கழகங்களில் பொருளாதாரப் படிப்பைத் தொடர்ந்தார். மிகச் சிறந்த பொருளாதார நிபுணரான டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு கௌரவ டி.லிட். பட்டங்கள் வழங்கப் பட்டுள்ளன.

1957ஆம் ஆண்டு பஞ்சாப் பல்கலையில் பொருளாதார விரிவுரையாளராகத் தனது பணியைத் துவங்கிய மன்மோகன் சிங், டில்லியில் உள்ள பொருளாதாரப் பள்ளியில் சர்வதேச வணிகத்துறையின் பேராசிரியராக உயர்ந்தார்.

1971இல் பொருளாதார கல்விப் பணியைத் துறந்து விட்டு மத்திய அயல்நாட்டு வர்த்தக அமைச்சகத்தின் பொருளாதார ஆலோசகரானார்.

1972 முதல் 1976ஆம் ஆண்டு வரை நிதியமைச்சகத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றினார்.

1976ஆம் ஆண்டு இந்திய மைய வங்கி மற்றும் இந்திய தொழிலக மேம்பாட்டு வங்கியின் இயக்குநரானார்.

1982ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இந்திய மைய வங்கியின் ஆளுநராகப் பொறுப்பேற்ற டாக்டர் மன் மோகன் சிங், 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை அப்பதவியில் நீடித்தார்.

இந்திய மைய வங்கியின் ஆளுநர் பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்ற டாக்டர் மன் மோகன் சிங் மத்திய திட்ட ஆணையத்தின் துணைத் தலைவரானார்.

1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி அன்றைய பிரதமர் சந்திரசேகரின் பொருளாதார ஆலோசகராகவும் 4 மாதங்கள் பணியாற்றினார்.

1991ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு காங்கிரஸ் கட்சி மத்தியில் மீண்டும் ஆட்சியைப் பிடித்த போது, நரசிம்மராவின் அமைச்சரவையில் நிதியமைச்சரானார் டாக்டர் மன் மோகன் சிங்.

அஸாம் மாநில சட்டமன்றத்தில் இருந்து மாநிலங்களவைக்குத் தேர்வு செய்யப்பட்டார்.

நரசிம்மராவ் அமைச்சரவையில் நிதியமைச்சராகப் பொறுப்பேற்ற டாக்டர் மன் மோகன் சிங், சுதந்திர பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலான பொருளாதார தாராளமயமாக்கலை அறிமுகம் செய்தார். இந்தியாவில் தான் மேற்கொண்ட இந்த பொருளாதார சீர்திருத்தத்திற்கு மனிதாபிமான அடிப்படை அவசியம் என்பதனைத் தொடர்ந்து வலியுறுத்தியவர் மன் மோகன் சிங்.

பொருளாதார வளர்ச்சி என்பது தொழிலகங்களுக்கும், வணிகர்களுக்கும் சுதந்திரம் அளிப்பது அல்ல என்று கூறும் டாக்டர் மன் மோகன் சிங் எப்படிப்பட்ட சீர்திருத்தம் ஆனாலும் அது சாதாரண கடைத்தட்டு மக்களுக்கும் பயனளிப்பதாக இருக்க வேண்டும் என்பதில் சமரசம் செய்து கொள்ளாதவர்.

தான் தொடக்கி வைத்த பொருளாதார சீர்திருத்தம் பாரதீய ஜனதாக் கட்சியின் 6 ஆண்டு கால ஆட்சியில் தனியார் மயமாக்கலில் தீவிரமாகச் சென்று கொண்டிருந்த நிலையில் அக்கட்சித் தலைமையிலான கூட்டணி தோற்று காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கவுள்ள நிலையில் பிரதமராகும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ள டாக்டர் மன் மோகன் சிங்கின் அணுகுமுறை எப்படி இருக்கப் போகிறது என்பது அனைவராலும் மிக்க கவனமாக எதிர்பார்க்கப்படுகிறது.

*நன்றி : இணையத்தளம்*

## தொடர்பு கொள்க

(சாவகச்சேரி)

வடபகுதி விவசாயிகள் 6 ஆயிரம் பேருக்கு இலவச விவசாயப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ். நிக்கொட் நிறுவனத்தால் வவுனியாவிலும் திருநெல்வேலியிலும் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தென்மராட்சியில் இருந்து இப்பயிற்சியில் பங்கு பற்ற விரும்பும் விவசாயிகள் தமது விபரங்களுடன் கைதடி கமநல சேவை நிலையத்தில் உள்ள விவசாயத்திணைக்களத்தின் அலுவலகத்தில் விவசாயப் போதனாசிரியர் ஆ.சிவபாலனைத்தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (29)

## சீருடைத்துணி பெறலாம்

(யாழ்ப்பாணம்)


தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்கள் ஊடாக சீருடைத்துணிக்கு விண்ணப்பம் செய்த மாணவர்களின் பெற்றோர்களை எதிர்வரும் 24ந் திகதி திங்கட்கிழமை தங்கள் கிராம அலுவலர்களின் பணிமனைக்குச் சென்று சீருடைத்துணிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்



நீர்வேலி ஶ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வைக் கவிஞர் முருகையன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும்,



இந்நிகழ்வில் கலந்து கொண்ட இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் உரையாற்றுவதையும், சபையில் நல்லை ஆதின குரு முதல்வர் நீர்வை மணி ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் படங்களில் காணலாம்.



அண்மையில் இடம்பெற்ற சுன்னாகம் கண்ணகி குடியிருப்பு முன்பள்ளித் திறப்பு விழாவில், கல்விக் குழுச் செயலாளர்

மீண்டும் உங்கள் வலம்புரியில்

விவாத அரங்கு

விடயம்

தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்

பலப்படுகின்றது

பலவீனப்படுகின்றது

உங்கள் கருத்துக்களை

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

பிரதி வெள்ளி தோறும்
வலம்புரியுடன்

KID'S OF ENGLISH

(ஆங்கில இணைப்பு)
வெளிவரவுள்ளது.
பள்ளிச் சிறுவர்களே!
மற்றும் பருவத்தினரே!
பயனடைய வாங்குங்கள்.

Kid's of English

# ஆஸியில் நடைபெறும் போட்டிகளில் ஒருபோதும் பங்கேற்கமாட்டேன்

## சாதனை வீரர் முரளி பிடிவாதம்



அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள கிரிக்கெற்போட்டிகளில் பங்கேற்பதில்லை என்று தான் எடுத்துள்ள முடிவில் இலங்கையின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளரும் உலக சாதனை பந்து வீச்சாளருமான முத்தையா முரளிதரன் உறுதியாகவுள்ளார்.

இம்முடிவு இலங்கை கிரிக்கெற் சபை நிர்வாகிகளுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து முரளிதரன் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இலங்கை கிரிக்கெற்சபை வலியுறுத்தி வருகிறது.

முரளிதரன இல்லாவிடில் அவுஸ்திரேலியாவின் வலுவான துடுப்பாட்டத்தை சமாளிப்பது கடினமாக இருக்கும் என்று பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இலங்கைக் கிரிக்கெற் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து கூறியுள்ளார்.


இலங்கை அணி அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் ஜூன் 24 முதல் ஜூலை 13ஆம் திகதிவரை 2டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

மேற்கிந்தியத் தீவகளின் கர்ட்னிவோல்ஷ் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 519விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளாா. இச் சாதனையை முறியடித்தார் முரளிதரன்.

இத்துடன் டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 527விக்கெற்றுக்களை வீழ்த்தியிருக்கும் முதல் உலக சாதனை வீரர் என்கிற பெருமையும் அவருக்குக்கிடைத்துள்ளது.

கர்ட்னி வோல்ஸின் சாதனையை அவர் முறியடித்ததும் முன்னாள் ஆஸி.வீரர்களும் அந்நாட்டின் பிரதமர் ஜோன் ஹாவார்டும் முரளிதரனின் பந்துவீச்சை விமர்சனம் செய்தனர். இதனால் அதிருப்தியுற்ற முரளிதரன், அவுஸ்திரேலியாவுடன இனி ஒருபோதும் விளையாடமாட்டேன் ஏன்று உறுதியாகக் கூறிவருகிறார்.

இதேவேளை, கடந்த பெப்ரவரி, மார்ச் மாதத்தில் இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற போட்டித்தொடரில் 3 டெஸ்ட்களில் 28 விக்கெற்றுக்களை முரளிதரன் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (18)



இஸ்ரேல் றமாற் ஜென்னில் நடந்த மாரில வெற்றிக்கிண்ணப் போட்டியில் தனது கட்சி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிபெற்றதைக் கொண்டாடும் பினிஸ் சந்கின்ஸ் கப்ரின் அபாஸ் தலானைப் படத்தில் காணலாம்.

# தேசிய ரீதியிலான கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் யாழ். மாவட்டத்திற்கு 3 பதக்கங்கள்

இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட தேசிய ரீதியிலான கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன் சிப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் 3 பதக்கங்களை வென்றெடுத்துள்ளனர்.

கடநதவார இறுதியில் கொழும்பில் நடைபெற்ற இந்தத் தேசிய ரீதியிலான கனிஷ்டமட்ட மெய் வலலுநர் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் எம்.சஞ்சீவ் 23வயதுக்குடபட்ட ஆண்களுக்கிடையிலான 110 மீற்றர் தடைதாண்டல் போட்டி நிகழ்வில் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கம் ஒன்றைக் கைப்பற்றியிருந்தார்.

23 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கிடையிலான உயரம்பாய்தல் நிகழவில் எஸ்.கமலமோகன் மூன்றாம் இடத்தினைப் பெற்றதன்மூலம் வெண்கலப்பதக்கம் ஒன்றை தனதாக்கிக்கொண்டார்.

அத்துடன், யாழ்.மாவட்ட வீராங்கனையான எஸ்.தயாளினி 23வயதிற்குட்பட்ட பெண்களுக்கிடையிலான முப்பாய்ச்சல் நிகழ்வில் 3ஆம் இடத்தினைப்பெற்று வெண்கலப்பதககம ஒன்றைத் தனதாக்கிக கொண்டார்.

இம்முறை நடைபெற்ற தேசிய ரீதியிலான கனிஷ்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ் மாவட்ட வீர, வராங்கனைகள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் அனைததையும் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினர் மேற்கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (68)

# பீபாவின் நூற்றாண்டு விழா இன்று கொண்டாடப்படுகிறது

சர்வதேச காலபந்தாட்ட சம்மேளனத்தின் நூற்றாண்டுவிழா இன்று கொண்டாடப்படுகிறது.

1904ஆம் ஆண்டு 7ஐரோப்பிய நாடுகளை மட்டுமே கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச கால் பந்தாடட சம்மேளனம் இன்று தனது நூற்றாண்டு நிறைவைக்கொண்டாடுகிறது.

1904ஆம் ஆண்டு பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க், நெதர்லாந்து, ஸ்பெயின், சுவீடன் மற்றும் சுவிற்ஸர்லாந்து ஆகிய 7 ஐரோப்பிய நாடுகள் மட்டுமே இதில் அங்கம்வகித்தன.

தற்போதைய நூறு ஆண்டு கால வளர்ச்சியில் பீபா அமைப்பில் 204 நாடுகள் இணைந்து கொண்டுள்ளமை சிறப்பான வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றது.

இதேவேளை, பீபாவின் அங்கத்துவநாடுகளில் ஒன்றான இலங்கையிலும் அன்றைய தினம் கொண்டாடப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை கால்பநதாட்ட சம்மேளனத்தினரால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்கொள்ளப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# தாய்லாந்தின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய புதிய நடவடிக்கை

இங்கிலாந்தின் முன்னணிக் கழகமான லிவப்பூர் விளையாட்டுக்கழகத்தின் 30 வீதமான பங்குகளை தாய்லாந்து அரசாங்கம் கொள்வளவு செய்யவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து அமைச்சரவையில் இதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைத் தாய்லாந்து நாட்டின் உல்லாசத்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சமர்ப்பித்திருந்தார்.

இதற்கென நிறுவனமொன்றை அமைத்து அதன்மூலம் நிதியமொன்றை ஏற்படுத்தவுள்ளதாகவும் தாய்லாந்து நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நிதியதத்தின் மூலம் தாய்லாந்து நாட்டின் விளையாட்டுத் துறையை முனனெடுப்பதற்கான முழுமையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தாய்லாந்து அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (68)

# விளையாட்டுச் செய்திகள்

# யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகள் ஜூலை மாதம் நடைபெறும்

யாழ்.மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விளையாடடு அதிகாரி கு.றொகான் இராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 22ஆம் 23ஆம் திகதிகளல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்தத் திட்டமிட்டிருந்த யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் அடுத்த மாதம் 1ஆம் 2ஆம் திகதிகளில் நடாத்தத் திட்டமிட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவு ரீதியிலான அணிகளுக்கிடையிலான குழுநிலைப் போட்டிகள் அனைத்தும் தற்போது நடைபெற்று முடிவடைந்துள்ளன.

இதனைத் தொடர்நது நடைபெறவுள்ள மெய்வல்லுநர் போட்டி நிகழவும், நடைபெற்ற அனைத்து போட்டி நிகழ்வுகளுக்கான பரிசளிப்பு விழாவுமே தற்போது பிற்போடப்பட்டுள்ளது. (68)



மனிதாபிமானத்தை வலியுறுத்தவும் சிறார் நல நிதிக்காகவும் மொனாகாவில் (கடந்த செவ்வாய்க்கிழமை) கால்பந்துப் போட்டி தொடங்குமுன் 'போங்' கொடுத்து ஜேர்மனியின் புகழ்பெற்ற ஃபார்முலா-1 கார் பந்தய வீரர் மைக்கேல் ஷுமாக்கர் (இடது) மொனாகாவின் பிரின்ஸி ஆல்பர்ட் சிறாநக்கான நட்சத்திர அணிக்கும் ஃபார்முலா-1 கார்பந்தய வீரர்களுக்கும் இடையே இப் போட்டி நடந்தது.

# கிரிக்கெற் தரவரிசையில் லாரா,முரளி முதலிடம்

டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளில் துடுப்பாட்ட தர வரிசையில் மேற்கிந்தியத்தீவகளின் பிறையன் லாரா, பந்துவீச்சில் இலங்கையின் முத்தையா முரளிதரனும் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளனர்.

அண்மையில் வெளியிடப்பட்ட பிறைஸ்வாட்டர் கூப்பர் டெஸ்ட் கிரிக்கெற் தரப்பட்டியலில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

துடுபபாட்ட தரவரிசையில் இரண்டாவது இடத்தில் ராகுல் ட்ராவிட்டும் மூன்றாவது இடத்தில் அவுஸ்திரேலியாவின் மத்தியூ ஹேடனும் உள்ளனர். இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 8வது இடத்திலும், வீரோந்திர சேவாக் ஒன்பதாவது இடத்திலும் துடுப்பாட்ட தரவரிசையில் உள்ளனர்.

பந்துவீச்சில் முரளிதரன் முதலிடத்தில் உள்ளார். தென்னாபிரிக்காவின் ஹான்பொலக் இரண்டாவது இடத்திலும் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

இந்தியாவின் அணில்கும்ளே 7வது இடத்திலும் கர்பஜன்சிங் 13வது இடத்திலும் சகிர்ஹான் 20வது இடத்திலும் உள்ளனர். (18)

## நீச்சல் போட்டி


இலங்கை பாடசாலை நீச்சல் சங்கம் ஒழுங்குசெய்யும் 31வது ஆண்டு நீச்சல் மற்றும் சுழியோடுதல் போட்டித் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

கொழும்பு சுகததாஸ நீச்சல் தடாகத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் ஜூன் மாதம் 8ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை திருமதி ரஞ்சனி த பொன்சேகர், செயலாளர், இலங்கைப் பாடசாலை நீச்சல சங்கம், பிஸொப் கல்லூரி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03 என்ற முகவரிக்கு அனுபபிவைக்குமாறும் [illegible] (49)

# தீண்டுதற்கரிய திருவடி வணக்கம்

சிவபெருமானுடைய திருவடியைச் சென்று சேருவதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பன எல்லாம் ஞானங்களேயாகும்.



அவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என சிவாகமங்கள் தெளிவுபடுத்தும். மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரை அஞ்ஞானத்தை அகற்றி மெய்யினால் வணங்குவதும் மெய்ஞ்ஞானம் அது சரியை வழிபாட்டைச் சார்ந்ததாகும். 'தலையே நீ வணங்காய் ...' எனத் திருநாவுக்கரசுநாயனார் தலைக்குப் பணிப்பார். நாயனார் அவ்வாறு பணிப்பதற்குக் காரணம் சிவபெருமானுடைய திருவடி எல்லாமாக விளங்குவது நமக்கு எல்லாப் பேறுகளையும் அருள வல்லது. 'திருவடி ஞானஞ் சிவமாக்குவிக்கும், திருவடிஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும், திருவடிஞானஞ் சிறைமல மீட்கும், திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே'

"சிவபெருமானுடைய பாதங்கயங்கள் மந்திரமாக உள்ளது. மாமருந்தாக உள்ளது. தந்திரமாக உள்ளது. தானங்களாக உள்ளது. அழகைத் தருவது, ஞான நெறியாது'' என்பன திருமந்திர வாக்கு.

### திருவருளின் இருப்பிடம்

திருவருள் வைப்பிடமாக விளங்கும் இறைவனுடைய திருவடி யாராலும் தீண்டுதற்கு அரியது போலக் காண்டற்கும் அரியது. 'காலன் அறிந்தான் அறிதற் கரியான் கழலடியே' என்று வாய்மை திறம்பா வாகீச முனிவர் திருவடியின அருமையினைத் தமிழோடிசை பாடலில் மறவாது மகிழ்ந்து பாடுவார்.

இறைவனுடைய திருப்பாதங்களைச் சுந்தரமூர்த்தி நாயனார் பின்வருமாறு போற்றித் துதிப்பார்.

"வேதங்களாகிய வண்டுகள் சூழ்ந்து அடியவர்களுடைய உள்ளத்தில் மலர்ந்த சச்சிதானந்தச் செந்தாமரை உலகம் உய்ய திருக் கூத்து ஆடுவன காலன் உயிரிழக்கக் கோபித்தன. ஏலவார் குழலி அம்மையார் செங்கையால் சீலமாக வருடச் சிவந்தன ஆகம ஞானிகளுடைய நெஞ்சில் பொலிவன. அறியாதவர்களுக்கு உண்மையை உணர்த்துவன சோதியாக எழும் சோதியினுள் சிறந்த செம்பொற் சோதியாகத் திகழ்வன. ஆதி நாரணன் நான்முகனால் நாடி நாடொனாதன. மறைகளாகிய யானை தாங்குவன.

### திருவடியின் பெருமை

திருவடியின் அருமை பெருமையினை உள்ளுணர்வால் உணரப் பெற்றவராதலின் வாகீசர் வாய்மையால் வாழ்த்துவார்.

"அரவணையாற் சிந்தித் தாற்றும்படி அருமறையான் சென்னிக் கணிலாம் மடி சரவணத்தான் கை தொழுது சாரும்மடி... அரும்பித்த செஞ்ஞாயிறேய்க்கும் மடி - அழகெளுதலாக அருற்சேவடி ... திருமகட்டுச் செந்தாமரையா மடி... சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் மடி உரைமாலையெல்லாமுடையவடி உரையால் உணரப்படாதவடி... இவ்வாறு ஆயிரம் ஆயிரமாக அள்ளூறும் இன்பத் தேனாகச் செந்தமிழால் அள்ளிச் சொரிவார்.

**"புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே**

**மணிவாசகர் மணி மணியாகத் திருவடியை அணி செய்வார்''**

"நாதன் தாள் வாழ்க இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க. ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க. ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க, வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க. புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க. பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க. ஈசனடி போற்றி எந்தையடி போற்றி தேசனடி போற்றி. சிவன் சேவடி போறறி" அவ்வாறு ஆயிரம் மடங்காக ஆனந்தத் தேன் சொரிந்து ஆனந்த வெள்ளத்துள் அழுத்துவார்.

### திருவடிக்குள் அனைத்தும் அடங்கும

திருவடிக்குள் அனைத்தும் அடக்கம் என்ற உண்மையையும் அருளிச் செய்வார். 'நின் ஆதியாம் பாதமலர் நின் அந்தமாம் செந்தளிர்கள். எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம். எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள். எல்லா உயிர்க்கும் ஈரும் இணையடிகள். யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்.

"பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே என்று பண்ணும் பலவோசைத் தமிழுமாகப் பாடுவார் பாலருவாயார். 'நன்மார்கும், குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக் கோணமாமலைய மர்ந்தாரே'' என திருக் கோணமலைத் திருப்பதிகத்திலும்,

"முடிகள் சாய்த்தடி பேணவல்லார்தம் மேல் மொய்த்தெழும் வினை போமே.''

"அல்லல் அசறுத் தரனடியிணை தொழும் அன்பராம் அடியாரே. எனத் திருக்கேதீச்சரத் திருப்பதிகத்திலும் திருவடி வணக்கத்தை நினைவிப்பார்.''

வள்ளுவனாரும் திருவடி வணக்கத்தைத் திருக்குறள் கடவுள் வாழ்த்தில் உலகம் கடைத்தேறக் கற்பிப்பார்.

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ, னற்றா தொழா ஆரெனின்''

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடு வாழ்வார்''

**சிவசண்முகவடிவேல்**

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார் - துன்புறார்''

"தன்குவமையில்லாதான் தாள் சேர்ந்தார் - மனக்கவலை மாற்றுவார்''

"அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார் - பிறவிப்பௌவம் பிறப்பார்''

" எண் குணத்தான் தாளை வணங்காத் தலை - குணமில''

"இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர்''

என்று திருவடி வணக்கத்தை ஏழு இட குறள்களில் அழுத்தங் கொடுத்து உயிரோவியம் போலாகச் செய்வார்.மனதப் பிறவியின் பயன் காலையும் மாலையும் கருமமாகக் கடவுளுடைய கழலடி கை தொழுதல். □

## இவ்வெள்ளி நற்சிந்தனை

---

## புதிய உறுப்பினர் நியமனம்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சி, புதிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இராஜிநாமா ஹத்தலுவே ரத்ன சீல தேரருக்குப் பதிலாக அக்பீமன தயாரட்ண தேரர் புதிய பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

## வீதிக் குறியீடுகள் இடப்படுகின்றன

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் பாதைகளைக் கடப்பதற்கான குறியீடுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பாடசாலைகளின் முன்புறமாக மஞ்சள் வர்ணத்தில் குறியிடப்பட்டு வருகின்றன. (79)

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக தமிழ் மாணவர் ஒன்றியமானது, வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகப் பல செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாகக் கடந்த சனிக்கிழமை சண்டிலிப்பாய் கோடடத்தில் அமைந்துள்ள அகதி முகாம் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய் தமிழ்க்கலவன் பாடசாலையில் தமிழ் மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த வி.கஜேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ச.நிலக்ஷன், தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் ச.எழிலன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். (18)

---

## பாதுகாப்பு வலயங்களுள் முடக்கப்பட்டுள்ள பாடசாலைகளை மீள இயங்கவிடுமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி அதனுள் முடக்கி வைக்கப்பட்டுள்ள பாடசாலைகளை இயல்பான முறையில இயங்குவதற்கு வழிவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

65 பாடசாலைகள் காணப்படும் மேற்படி பகுதியில் 17 பாடசாலைகள் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 11 பாடசாலைகள் அடிப்படைவசதிகள் அற்ற நிலையிலேயே தற்காலிகமாக இயங்கி வருகின்றன. ஏனைய 6 பாடசாலைகளும் முற்றாக இயங்காதிருக்கின்றன.

இதனால் இப்பகுதி மாணவர்களின் கல்வி நிலைமை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே வடமராட்சிப் பகுதி பொது அமைப்புகளும் கல்விசார் அமைப்புகளும் இக் கோரிக்கையை விடுத்துள்ளன.

இதேவேளை, இப் பகுதியில் உள்ள பாதுகாப்பு வலயங்களுள் காணப்படும் பாடசாலைகளை இயல்பாக இயங்கவிடுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் 524ஆவது படையணித் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (43)

## வறிய மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்த விசேட கணனிப் பயிற்சித் திட்டம்

### தமிழீழ மாணவர் ஒன்றியம் நடவடிக்கை

(திருநெல்வேலி)

வறிய மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மாணவர் ஒன்றியம் விசேட கணனிப் பயிற்சித் திட்டமொன்றை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்தும் வகையில் தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் தமிழ் மாணவர் ஒன்றியம் இவ் இலவச கணனிப் பயிற்சிகளை வழங்கிவருகிறது.

தீவுப்பகுதி மாணவர்களுக்காக நெடுந்தீவிலும், வலிகாமம் பகுதி மாணவர்களுக்காக அச்சுவேலி குட்டியப்புலம் பகுதியிலும் இந்த மையங்கள் அமைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப் பயிற்சித் திட்டத்தின் கீழ் சுமார் 100ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (43)

## கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

வடமராட்சி கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் நிக்கொட் நிறுவனம் 30 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

முதல் கட்டமாக இதில் 15 மில்லியன் ரூபா தற்போது கிடைத்துள்ளது. இதனைப் பயன்படுத்தி வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த 30 பேருக்கும், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த 32 பேருக்கும் வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்குவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடகக்கு கடற்றொழிலாளர் சமாசத்தின் ஊடாக சுழற்சி முறைக் கடன் அடிப்படையிலேயே இது வழங்கப்படுகிறது.

இதனைவிட மீன்பிடி வலை உபகரணங்கள், வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் கட்டுமரங்கள் ஆகியவற்றுக்காக மிகுதி 15 மில்லியன் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (35)

## மகாகும்பாபிஷேகம்

சுன்னாகம் மயிலணிப்பகுதி ஸ்ரீ சுபபிரமணியப் பெருமான ஆலய மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (8)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி 4 ஆவது கட்டமாக அந்தந்தப் பகுதி நிலையங்களில் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் வீதி அரசினர் மிருக வைத்திய நிலையம், பி.ப 1.00 மணிக்கு சென்.பீற்றர் பாலர் பாடசாலை, பி.ப.2.00 மணிக்கு அத்தியடி பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களிலும், எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு அரசடி ஜன சக்தி சனசமூக நிலையம், பி.ப 2.00 மணிக்கு திருநெல்வேலி சிவன் கோவில் அருகாமை ஆகியவற்றிலும், மறுநாள் காலை 8.30 மணிக்கு கல்வியன்காடு வன்னிய சிங்கம் பொதுப்பணி மன்றத்திலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.மரியதர்சன் அறிவித்துள்ளார். (18)

## தென்மராட்சிப் பாடசாலைகளைப் புனரமைக்க நிதியுதவி

(மருதங்கேணி)

யுத்த நடவடிக்கைகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட தென்மராட்சியிலுள்ள மூன்று பாடசாலைகளினதும் அபிவிருத்திவேலைகளுக்காக மாகாணக்கல்வி அமைச்சு மூலதன அடிப்படையிலான நன்கொடை வேலைத்திட்டதின் கீழ் 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு வகுப்பறைத் தொகுதிகளை அமைக்க 6 இலட்சம் ரூபாவும், மிருசுவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இரண்டு மாடிக்கட்டடத்திற்கான எஞ்சிய வேலைகளை முடிப்பதற்கு 6 இலட்சம் ரூபாவும் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்திற்கு கணனி அறை அமைப்பதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும ஒதுக்கப்பட்டுள்ளது. (35)

## அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையைக் குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலையைக் குறைப்பதற்கு வர்த்தகர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் வர்த்தகர் குழுவுக்கும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ் இணக்கப்பாடு காணப்பட்டது. சுமார் 40 இற்கும் மேற்பட்டவர்த்தகர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதற்கமைய பருப்பு, சீனி ஆகியவற்றின் விலையை கிலோ ஒன்றிற்கு ஒரு ரூபா வீதம் குறைப்பதற்கு வர்த்தகர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

மேலும் களஞ்சியசாலைகளில் ஏற்படும் செலவுகளே பொருட்களின் விலை அதிகரிப்பிற்குப் பிரதான காரணம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (8)

# ஜெயலலிதாவின் அறிவிப்பு தி.மு.க. அணிக்குக் கிடைத்த 41ஆவது வெற்றி

(சென்னை)

அரசு ஊழியர்களுக்கு எதிரான வழக்குகள் வாபஸ் உட்பட பல்வேறு அறிவிப்புகளை தமிழக அரசு வெளியிட்டிருப்பது கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்ற பழமொழிக்கு ஏற்ப உள்ளது என்று கருத்துத் தெரிவித்துள்ளார் தி.மு.க.தலைவர் கருணாநிதி. இது குறித்து டில்லியில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் அளித்த பேட்டியில் அ.தி.மு.க. அரசு ஒன்றும் புதிதாக அறிவிக்கவில்லை. தி.மு.க. ஆட்சியில் தரப்பட்ட சலுகைகள், உரிமைகள், நிறைவேற்றப்பட்ட திட்டங்களை மூன்று ஆண்டுகால ஆட்சியில் ஜெயலலிதா ஒழித்துக் கட்டினார் என்றும், இத் தோல்விக்குப் பிறகு, கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்ற பழமொழிக்கேற்ப இப்போது சூரிய நமஸ்காரத்துக்கு வந்திருக்கிறார் என்று கருணாநிதி கூறினார்.

சூரியன் தி.மு.க.வின் தேர்தல் சின்னம் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த முடிவை எடுத்திருப்பதற்குக் காரணம் பயம் தான். அடுத்த முறை தேர்தலில் ஜெயிபபதற்கு இப்போதே மக்களை ஏமாற்ற ஆரம்பித்துவிட்டார். மக்கள் ஏமாறுவார்கள் என்று நான் நம்பவில்லை. தி.மு.க.தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி 40 இடங்களில் வென்றது. இந்த அறிவிப்பு, அக்கூட்டணிக்குக கிடைதத 41ஆவது வெற்றி என்றார் கருணாநிதி. ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோவும் இதே போன்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறுகையில், ஜெயலலிதா அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்தோம். அதை ஏற்று அவருக்கு எதிராக மக்கள் வாக்களித் திருக்கிறார்கள். மக்கள் விரோத உத்தரவுகளை இப்போது வாபஸ் பெற்றுள்ளார் ஜெயலலிதா என்றார். ஆனால், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்ற இலட்சக் கணக்கான மக்கள் பட்ட கஷ்டங்களையும் மன உளைச சலையும் அவரால் வாபஸ் பெற முடியாது என்றார் கருணாநிதி. (து)



சோனியா காந்தி பிரதமர் பதவியேற்க மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நாடு முழுவதும் காங்கிரஸ் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்னையில் உள்ள காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியப் பிரதேச முதலமைச்சர் உமா பாரதியின் கொடும் பாவியை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



குடியரசுத் தலைவரைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரிய பின்னர் பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப் பட்டநிலையில் பிரதமர் பதவியை ஏற்க சோனியா காந்தி மறுத்துவிட்டதால் புதிய பிரதமராக டாக்டர் மன்மோகன் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமராக நியமிக்கப்பட்ட மன்மோகன் சிங்கையும் சோனியாகாந்தியையும் படத்தில் காணலாம்.

# ஜெயலலிதாவின் திடீர் நடவடிக்கை பழிவாங்கும் சட்டங்கள் ரத்தாகின்றன

(சென்னை)

கௌதம புத்தருக்கு அரச மரத்தடியில் ஞானம் ஏற்பட்டது.

அசோகச் சக்கரவர்த்திக்கு போர்க்களத்தின் மத்தியிலே ஞானம் பிறந்தது.

இதேபோல, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில்



40 தொகுதிகளிலும் அடைந்த படு தோல்விகளின் மத்தியில் ஞானோதயம் ஏற்பட்டுள்ளது போல் தெரிகிறது.

தான்தோன்றித் தனமாகவும், அகம்பாவப் போக்குடனும் முன்னைய தி.மு.க. அரசு விவசாயிகளுக்கு அளித்த இலவச மின்சாரத் திட்டம் போன்றவற்றை இரத்துச் செய்தும், வேலை நிறுத்தம் செய்த அரச ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எதிராக முன்னைய கால நடவடிக்கைகளையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் அவசரச்சட்டம் கொண்டு வந்து அவர்களை அடக்கி, அவர்களைப் பணியில் இருந்து இடை நிறுத்தம் செய்து, சம்பள உயர்வு, பதவியுயர்வு போன்ற சலுகைகளை ரத்துச் செய்தும், அரசியல் தலைவர்களுக்கு எதிராகப் பழிவாங்கும் உணர்ச்சியுடன் வழக்குத் தொடுத்தும், ஏதேச்சதிகார ஆட்சி நடந்தி வந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தேர்தலில் கிடைத்த பலத்த அடியின் பின், தான் இதுவரை பிறப்பித்த பல உத்தரவுகளையெல்லாம் ரத்துச் செய்ய முன்வந்திருக்கிறார்.

விவசாய் பம்ப் செற்களுக்கும், குடிசைகளுக்கும் இனி மீற்றர் பொருத்தப்படவேண்டியதில்லை என அவர் அறிவித்திருக்கிறார்.

பொது விநியோகக் கடைகளில் பொருட்களை சலுகை விலையில் பெறுவதற்காக ஊதிய உச்சவரம்பை மாதம் 5,000 ரூபாவாக நிர்ணயித்து மற்றவர்களுக்கெல்லாம் ரேஷன் அட்டைகளில் ஹெச் முத்திரை குத்திய அரசு ஆணை ரத்துச் செய்யப்படுகிறது.

நியாய விலைக் கடைகளில் கூப்பன் கொடுத்து அரிசி பெறும் முறையும் ரத்துச் செய்யப்படுகிறது.

சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் மாநிலத்தில் அவசரச் சட்டம் ஒன்றின் மூலம் கொண்டு வரப்பட்ட சர்ச்சைக்குரிய கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் நீக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாதம் பொது வேலை நிறுத்தம் செய்த அரசு ஊழியர்கள் சுமார் ஒன்றே முக்கால் இலட்சம் பேர் பதவிநீக்கம் செய்யப்பட்டு, பின்னர் உச்ச நீதி மன்ற ஆலோசனைப்படி பெரும்பாலானவர்கள் சில மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

ஆனால், 1000 ஊழியர்களுக்குப் பதவி உயர்வு ரத்து போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. அந்தத் தண்டனைகள் ரத்து செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான வழக்குகள் விலக்கிக் கொள்ளப்படுகின்றன.

விவசாயிகள், குடிசை வாழ் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் மீண்டும் வழங்கப்படும்.

தனியார்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மீண்டும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும்.

தி.மு.க.தலைவர் கருணாநிதி மற்றும் மற்றைய அரசியல் கட்சித் தலைவர்களுக்கு எதிராக 'எஸ்மா' எனப்படும் சட்டத்தின் கீழ் அரசு ஊழியர் வேலை நிறுத்தத்தைத் தூணடிவிட்டதாக போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன.

பல பத்திரிகைகள் மீது சரமாரியாகத் தொடுக்கப்பட்ட பல்வேறு அவதூறு வழக்குகள் வாபஸ் பெறப்படுகின்றன.

மதமாற்றச் சட்டம் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையென்றாலும் இந்தச் சட்டத்துக்குக் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள். இது 'விரும்பும் மதத்தைப் பின்பற்றலாம்' என்று அரசியல் சாசனத்தில் அளிக்கப்பட்ட உரிமையைப் பறிப்பதாகும் என்று சிறுபான்மை மதத்தவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தது குறிப்பிடத்தக்கது.

டான்சி போன்ற வழங்குகளிலிருந்து விடுபடவே பா.ஜ.க. தலைமையிலான அரசை மகிழ்விக்க, பா.ஜ.கவுக்கு உவப்பான இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதென்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டிவந்தன.

இதனால் கிறிஸ்தவ அமைப்புகள் வெளிப்படையாகவே அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்குக் கடந்த தேர்தலில் வாக்களிக்க வேண்டா மென்று அறிக்கைகள் விடுத்திருந்தன.

ஜெயலலிதாவின் இந்த அறிவிப்புகள் 40 இடங்களை வென்ற தி.மு.க.கூட்டணிக்குக் கிடைத்த 41 ஆவது வெற்றி என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறார்.

இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு இது ஈடுசெய்ய முடியாத ஒன்று; கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் இல்லை என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. கூறியிருக்கிறார்.

2006 ஆம் ஆண்டு வரப்போகும சட்டமன்றத் தேர்தலுக்காகவே சர்ச்சைக்குரிய இந்த நடவடிக்கைகள் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று நோக்கர்கள் கூறுகிறார்கள். (து)

# வை.கோவின் கடவுச்சீட்டை திரும்பத்தர உயர்நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோவின் பாஸ்போர்ட்டை அவரிடம் திரும்ப ஒப்படைக்குமாறு பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொடா சட்டத்தின் கீழ் கைதான வை.கோ. பிணையில் விடுவிக்கப்பட்டார். அவரது பாஸ்போர்ட் சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது. அந்த பாஸ்போர்ட் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும் பாஸ்போர்ட். கடந்த பெப்ரவரி மாதம் மக்களவை கலைக்கப்பட்டதால், அந்த பாஸ்போர்ட் காலாவதியானது.

இந்நிலையில், அடுத்த மாதம் அமெரிக்கா செல்லத் திட்டமிட்டுள்ளார் வை.கோ. அதற்காக அந்த பழைய பாஸ்போர்ட்டை தன்னிடம் ஒப்படைத்தால், அதைச் சமர்ப்பித்து புதிய பாஸ்போர்ட் வாங்க வசதியாக இருக்கும் என்று கூறி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

நீதிபதிகள் என்.வி.பாலசுப்பிரமணியன், என்.கண்ணதாசன் ஆகியோர் இம் மனுவை கடந்த செவ்வாய்க்கிழமை விசாரித்தனர்.

வை.கோவின் பாஸ்போர்ட் ஏற்கனவே காலாவதியாகிவிட்டதால் அதை சிறப்பு நீதிமன்றம் திருப்பித் தரவேண்டும். அதன் [illegible] புதிய பாஸ்போர்ட் [illegible] வை.கோ விணணப்பிக்க[illegible] புதிய பாஸ்போர்ட்டை வை.கோவிடம் அதிகாரிகள் தரக்கூடாது. அதை மீண்டும் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்திலேயே பாஸ்போர்ட் அதிகாரிகள் ஒப்படைக்க வேண் டும். அதன் பிறகு மீண்டும் உயர் நீதிமன்றத்தில் வை.கோ மனுத் தாக்கல் செய்யலாம் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (து)

## இந்தியச் செய்திகள்

### கேரள முன்னாள் முதலமைச்சர் நாயனார் காலமானார்

கேரளமாநில முன்னாள் முதலமைச்சரும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், அரசியல் குழு உறுப்பினருமான ஈ.கே.நாயனார் நேற்று முன்தினம் புதுடில்லியிலுள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் காலமானார்.

அவருக்கு வயது 86. அவர் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். ஈ.கே.நாயனார் கேரள மாநிலத்தின் முதலமைச்சராக மூன்று முறை பணியாற்றியுள்ளார்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராகவும் அவர் நீண்ட நாள் பணியாற்றியிருக்கிறார். (து)



நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று சோனியா காந்தி பிரதமராவார் என்ற நிலையில் வரலாறு காணாத அளவில் பங்குச் சந்தைகள் பெருமளவு வீழ்ச்சியடைந்தன. இதனால் பல இலட்ச கோடி ரூபாய்கள் இழப்பு ஏற்பட்டன. தற்போது மன் மோகன் சிங் பிரதமராக நியமிக்கப்பட்ட நிலையில் பங்கு வர்த்தகம் முன்னேற்றமான நிலையை எட்டியுள்ளது.

# வெள்ளி முற்றம்

# ஜென்ம பூமி

**மனதைத் தொடும் விதத்தில் கதை சொல்ல வல்லவர் என்று பாராட்டுப்பெற்றவர் சி. பன்னா செல்வம் இவர் வீரகேசரி, ஆனந்த விகடன், குமுதம், சாவி போன்ற பத்திரிகைகளில் சிறுகதை எழுதியுள்ளார்.**

**"திறந்த வெளிச் சிறுகதை" என்னும் சிறு கதைத் தொகுதியை வெளியிட்டவர். தமிழகத்திற்கு குடிபெயர்ந்த இவரது ஜென்ம பூமி இன்று பிரசுமராகிறது.**

ஓர் அம்பைப்போல் ஊடுருவிக் கொண்டே இதயத்தின் அடியாழத்தில் போய் தைத்த அந்தக்குரல் யுகயுகமாக எதிரொலித்துக் கொண்டிருக்கும் மானிடர்களின் ஒருமித்த குரலாக எனக்குப் புலப்பட ஒரு கணம் அப்படியே நின்று விட்டேன்.

"பார்த்த பிறகும் பார்க்காதது போல மொகத்தைத் திருப்பிக்கிட்டுப் போறீங்களே, ஐயா யாராச்சும் ஒரே ஒருத்தன் நின்னு ஏண்டா உன சோகம் என்னடான்னு ஒரே ஒரு வார்த்தை கேட்கமாட்டீங்களா? கடைசி வரைக்கும் கேட்கவே மாட்டீங்களா?"

மலைச்சரிவில் ஏறுபவர்களும் இறங்குபவர்களுமாய் நிறைய மனிதர்கள். ஆனால் இப்படியொரு குரல் ஒலியைக் கேட்காதவர்கள் போல, கீழே ஒரு மனிதன் விழுநது கிடக்காதது போல நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி திரும்பத் திரும்ப அவனது குரல்.

ஒருக்களித்துப் படுத்தாற் போல பரந்து கிடந்து அவனை நோக்கி சில அடிகள் எடுத்து வைத்தேன். எனக்கு சற்று முன்னால் போய்க் கொண்டிருந்த வேணு, வேகமாக என்னை நோக்கித் திரும்பி வந்தான்.

"பெரு மழை வர்றாப்ல இருக்கு சார். நீங்க ஊருக்குப் புதுசு. நனைஞ்சா குளிர்தாங்க மாட்டீங்க. வாங்க சீக்கிரமா ரூமுக்கு போயிடலாம்" என்று அவசரப்படுத்தினார்.

எதிர்ப்புற மலையில் மழை இறங்கிக் கொண்டிருந்தது. "நான் அந்த மனிதன் கிட்டப் பேசணுமே வேணு சார்" என்றேன்.

வேணு என்னை விநோதமாகப பார்த்தார்.

"சார் அவன் ஒரு மிடாக் குடியன. தினமும் இதே கதை தான். ஒங்களுக்குப் பேச ஆசையானா நாளைக்கு காலையிலே கூட வந்து பேசிககலாம். இப்ப வேணாம். ரூமுக்குப் போயிரலாம் வாங்க..."

எங்கே அவரை மீறிப் போய் விடுவேனோ என்று பயப்பட்டவரைப போல என் கையைப் பற்றிக் கொண்டு ஓட்டமும் நடையுமாய் மலைச் சரிவில இறங்க ஆரம்பித்து விட்டார், அவர்.

மழைத்துளிகள் விழ ஆரம்பித தன. நனைவதற்குள் அறைக்கு வந்து விட்டோம். ஆனாலும் என் உடல் குளிரால் நடுங்கிற்று. வேணு தண்டிமிருந்து ஸ்வெட்டரை எனக்குத் தந்தார். காபி வரவழைத்து சாப்பிட்டோம். குளிர் மட்டுப்பட்டது. வேணு மலைப்பிரதேசத்து வாழ்க்கையை விவரிக்க ஆரம்பித்தார். எனக்குள் சற்று முன் கேட்ட அந்தக் குரல் எழுந்தது.

" அந்த மனிதன் யார் வேணு சார்?"

" எந்த மனிதனை கேட்கிறீங்க?"

"மலைச் சரிவிலே தரையிலே கிடந்தானே யாராச்சும் ஒரே ஒருத்தர் நின்னு உன் சோகம் என்னடான்னு"

"அட! இன்னுமா சார் அவனை நெனைச்சிக்கிட்டு இருக்கிறீங்க?".

"அந்தக் கேள்வியும் குரலும் என் மனசுக்குள்ளே ஆழமாகப் பதிஞ்சு போச்சு வேணு சார்! உங்களுக்கு கூட அவன் சோகம் என்னன்னு கேக்கத்தோணலையா சார்?"

இங்கே யாருக்குத் தான் சோகம் இல்லே? யார் சோகத்தை யார் கேட்கிறது? இல்லை- கேட்டுத் தான என்ன பண்ண? அதுவும் தினமும் குடிச்சிட்டு தெருவிலே விழுந்து கிடக்கிறவன் கிட்ட விடுங்க சார்"

"வேணுவிடம் தர்க்கத்தை தவிர்த்தேன் நான். இந்த ஊருக்கு மாற்றலாகி வந்து மூன்று நாட்களே ஆகிறது. ஒரே அலுவலகத்தில் வேலை பார்ப்பதால் தனது அறையில் சில நாட்கள் தங்கிக் கொள்ள அனுமதித்திருககிறார். அவரைப் பற்றி அதிகமாக எதுவும் தெரியாது.

யன்னல் வழியாகப் பார்த்தேன் மழை பெய்து கொண்டிருந்தது. வாழ்க்கையை அனுபவிக்கும் இளம ஜோடிகள் மழையில் நனைநதபடி இணைந்து நடந்து கொண்டிருந்தார்கள். அந்த மனிதன் முழுமையாய் நனைந்து போயிருப்பானே என்று நினைவு வந்தது.

மழை ஓய்ந்து மறுபடியும் நீல வானம் அரை குறையாய்த் தென்பட்ட போது மலைப்பிரதேசம் மிக ரம்மியமாய்க் காட்சி தந்தது.

"சார், நான் ஒரு நண்பரை பார்க்க போகிறேன. திரும்பி வர 'லேட்' டாகும். இல்லேன்னா காலையில் தான் திரும்பி வருவேன். நீங்க ஹோட்டல்ல சாப்பிட்டுட்டு வந்து படுததுக்குங்க" என்று வேணு புறப்பட்டு வெளியே போனார்.


அரைமணி நேரத்திற்குப் பிறகு அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தேன். தெருக்களிலும் மலைச்சரிவிலும் ஜன நடமாட்டம் குறைந்திருந்தது.

அந்த மனிதனைக் காணவில்லை குரலும் கேட்கவில்லை. ஏமாற்றத்துடன் நடந்து திரிந்தேன். இருள் விழ தொடங்கியதும் ஹோட்டலுக்கு சென்று டிபன் சாப்பிட்டு விட்டு திரும்பி வந்து படுக்கையில் சாய்ந்தேன்.

"கேக்கமாட்டீங்களா? யாருமே கேட்கவே மாட்டீங்களா? அந்தக் குரல்.

கணணாடி ஜன்னல் வழியாகப் பார்த்தேன் இருளும் குளிரும் கலந்த பூமியில் ஆங்காங்கே சில மின் விளக்குகளின் ஒளியைத் தவிர வேறெதுவும் புலப்படவில்லை. அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு தெருவுக்கு வந்து குரல் வந்த திக்கில் நடந்தேன

ஒரு தெரு விளக்குக் கம்பத்தின் கீழ விழுந்து கிடந்தான் .அவன் மீது மின் விளக்கில் மோதிய பூச்சிகள் விழுந்து கொண்டிருந்தன. சற்றுப்புரண டான். சாக்கடைக்குள் விழுந்து விடப் போகிறானே என்று




அவன் கையைப்பற்றி இழுத்துப் போட்டு "பெரியவரே!" என்றேன்.

அவன் திடுமென எழுந்து உட் கார்ந்தான். விந்தையாகத் தான் பார்த்தான். நம்பிக்கையற்ற தொனியில் "யார் நீங்கள்? என்றான்.

குரலில் தடுமாற்றம் இல்லை. போதை தெளிந்திருக்க வேண்டும்.

"சாதாரண மனுசன்" என்றேன்.

"நீங்களும் குடிப்பீங்களா?"

"இல்லே"

"ஏன்? உங்களுக்கு கஷ்ட நஷ்டம், இழப்பு, அவமானம் இப்படி எதுவுமே ஏற்பட்டதில்லையா?"

"அதெல்லாம் ஏற்பட்டா குடிச்சுத்தான் தீரணுமா? அதிருக்கட்டும் உங்கள் சோகம் என்ன? எதுக்காக தினமும் குடிச்சிட்டு இப்படி தெருவிலே விழுந்து கிடக்கிறீங்க"

"நீஙக கேட்கிறது நிஜம்தானே? "

"ஆமா"

அந்த மனிதன் சட்டென்று என் கைகளைப் பற்றிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான். தெருவில் நடந்து கொண்டிருந்த இரண்டொரு பேர் வேடிக்கை பார்ப்பது போல் நின்றனர்.

"அந்த இடத்துக்குப் போயிரலாம" எனறு புதுத்தெம்பு பெற்றவனைப போல் எழுந்து நடந்தான். பினனால் சென்றேன். "இப் போதைகை!" என்றான்.

அது ஒரு பாழடைந்த கட்டிடத்தின் பகுதி.

"உக்காருங்க சார்" என்று சிதைந்து போன சிமெண்டு தரையை தூசு தட்டினான்.

"சாப்பிட ஏதாச்சும் வாங்கி வரட்டுமா?" என்று கேட்டேன்.

"முதல்லே என் மனப்பாரத்தை எறக்கி வச்சிடுவேன்" என்று சொல்ல ஆரம்பித்தான்.

"எனக்கு ஜென்ம பூமி இது தான்"

எனக்கு பத்து வயது இருக்கும். என் தாயும் தகப்பனும் பஞ்சம் பொழைக்க அந்த தேசத்துக்குப் போனப்ப என்னையும் கூட்டிக்கிட்டுப் போனாங்க. நான் பொறந்து வளர்ந்த மண்ணைவிட்டு போனப்போ அழுத அழுகையும பட்ட வேதனையும் இருக்கே காலம் பூராவும் அதை மறக்கவே முடியாது.

நாற்பது வருசம் அந்த தேசத்தில் வாழ்ந்தேன். இங்கே பஞ்சத்தாலே துயரம்ன்னா அங்கே அடிமை வாழ்க்கையிலே துயரம்.

தாய்மொழியிலே பேசுறதுக்கே பயப்புடணும். மனசிலே தோணினதை துணிச்சலா வாய்விட்டு சொல்ல யோசிக்கணும். தோட்டக்காட்டான், கள்ளத்தோணி, நாடத்தவன்னு எத்தனையோ ஏளனம். இந்தியன் தமிழன்னு வஞ்சகப் பார்வை. ஓட்டுரிமை கூட கெடையாது.

வெறும் ரொட்டியும் சோறும் துணியும் மட்டுந்தான் வாழ்க்கையா?

எனக்கு அப்பிடி தோணவே! நான் மனசாலே ஒவ்வொரு நிமிசமும் தமிழன், இந்தியனாகத்தான் வாழ்ந்தேன். என்னைப் பொறுத்த வரைக்கும் அந்த தேச வாழ்க்கை ஒரு தண்டனை தான்.

திடீர்ன்னு ரெண்டு தேசப் பிரதமர்களும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் பண்ணிக்கிட்டாங்க. அது மனுச உரிமைகளை, மனுச ஆன்மாவை கசக்கிப் பிழிஞ்ச ஒப்பந்தம்ன்னு தான் சொலலணும. அந்த ஒப்பந்தத்தாலே பத்து லட்சம் பேர் கொண்ட ஒரு சமூகத்தோட 'தலை விதியே' மாறிப்போச்சு.

என்னைப் பொறுத்தவரைக்கும் எப்படா இந்தியாவுக்கு வரு வோம்னனு தவிசசுக்கிட்டு இருந்தவன்.

தது. ஆனா என்னோட ஒரே [illegible] என்னோட ஜென்மபூமி இது தான்னுட்டு இந்தியாவுக்கு வரமறுத்திட்டான், ஒரு ஒப்பந்தம் தந்தையையும் மகனையும் பிரிச்சிருக்கு. தேசங்களும் வேறே வேறேன்னு ஆக்கிருச்சு நான் மட்டும் என் ஜென்ம பூமிக்குத் திரும்பி வந்தேன். பால்ய சிநேகிதர்களையும் உறவுக்காரர்களையும் ஆசையோட தேடிப் போனேன். கிடைச்சதெல்லாம் ஏமாற்றமும் வேதனையுந்தான். உன்னைத் தெரியாதுங்கிற பதில. எதுக்கு இங்கே வந்தேங்கிற கேள்வி.

எங்கே போனாலும் அகதிங்கிற முத்திரை!

நான் என் தாய் நாட்டுக்கு பொறநத மண்ணுக்குத் திரும்பி வநது இருபது வருசங்கள் கழிஞ்சு போச்சு. ஆனா இந்த தேசம் என்னை இப்பவும் அந்நியனா அகதியாத் தான் பாக்குது. இது கொடுமை இல்லையா!

நான் என் தாய் நாட்டுக்கு பொறத்த மண்ணுக்குத் திரும்பி வந்து இருபது வருசங்கள் கழிஞ்சு போச்சு. ஆனா இந்த தேசம் என்னை இப்பவும் அந்நியனா அகதியாத் தான் பாக்குது. இது கொடுமை இல்லையா!

திடீர்ன்னு முன்னாள் பிரதமரோட அந்தப் படுகொலைச் சம்பவம். அதிர்ச்சியடைந்து போயிட்டேன். அதிலிருந்து மீள்றதுக்குள்ளேதிடீர்ன்னு ஒரு உத்தரவு.

எலலா அகதிகளும் பொலிஸ நிலையத்தில் போய் பதிவு செய்யணுமாம்.

நான் அகதி இல்லை. சட்டப் படியும் மனசாட்சியின் படியும் இந்தியன்.

நான் எதுக்குப் பதிவு செய்யணும்? திடீர் திடீர்ன்னு பொலிஸ்காரன்கள் வந்தாங்க தாயகம் திருமபிய தமிழர்களையும் அடிச்சு ஒதைச்சு இழுத்துக்கிட்டுப் போனாங்க ஏண்டா பதிவு செய்யல்லே, எங்கேடா போட்டோ பாஸ் போட்டுன்னு படாதபாடு படுத்தினாங்க பொலிஸ் கெடு பிடிககுப் பயந்தவ தாலியை, நகை நட்டுக்களை விற்று போட் டோ ஸ்ருடி யோவுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் பணம் அழுதாங்க. திடீர்ன்னு ஒரு நாள் பொலிஸ்காரங்க வந்தாங்க என் பேச்சையோ நியாயத்தையோ அவங்க காது குடுத்தே கேட்கலே.

எங்கடா பாஸ் போட். ஏண்டா நீ பொலிஸில் வந்து பதிவு செய்யலேன்னு அடிச்சு உதைச்சு ஒரு நாயைப்போல என்னைத் தெரு விலே இழுத்துக்கிட்டுப் போனாங்க. சித்திரவதை பண்ணினாங்க.

அந்த அந் நிய நாட்டிலே இன வெறியன்களாலே கூட நான் இவ்வளவு சித்தி ரவதைகளுக்கு ஆளானதில்லே.

இரண்டு தேசங்களோட ரெண்டு தலைமுறைகளோட பத்து இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு இனத்தோட வாழ்க்கை அனுபவங்களை சுமந்தவன் நான். பஞ்சம் பிழைக்கப்போன தேசத்திலே பசியில்லாமே வாழ்நதாலும் பிறந்த தேசத்தையே ஒவ்வொரு நிமிடமும் மனசுக்குள்ளே சுமந்தவன் நான். இந்த ஊரிலே அடுத்த தெரு வோட பெயர் என்னன்னே தெரியாதவன் கூட எனக்கு அகதிப்பட்டம் சூட்டுகிறான்.

ஒருநாள் என்னைக் கோர்ட்டிலே கொண்டுபோய் நிறுத்தினாங்க. அந்த ஜட்ஜ் 'நீ அகதி தானே? ன்னு கேட்டார்.

நான் இந்தியாவில் பிறந்தவன் பிழைப்புக்காக பிற தேசம் போனவன். இந்திய அரசாங்கத்தின் ஒப்பந்தப்படி தாயகம் திரும்பினவன் நான் அகதி இல்லையென்னு எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். ஆனால் பரிதாபம் அந்த ஜட்ஜுக்கே யார் இந்தியன், யார் எந்தத் தமிழன்னு புரியல்லே ஜட் ஜுக்கு மட்டுமா? ஜனங்களுக்கு, அதிகாரிகளுக்கு, அரசியல்வாதிகளுக்கு யாருக்குமே புரியலே அவங்க புரிஞ்சுக்கிறவும் விரும்பலேங்கிறது தான் கொடுமை.

நீ பதிவு செய்யாதது குற்றந்தான்னு தீர்ப்பளிச்சிட்டார். அந்த ஜட்ஜ் நல்லவேளையா அப்பீல்லே ஜட்ஜகள் ,தாயகம் திரும்பினவங்க பொலிஸ் நிலையத்திலே பதிவு செய்ய வேண்டியதில்லேன்னு தீர்ப்பு வழங்கினாங்க ஆனா அதற்குள்ளே எல்லா சித்திரவதைகளையும் மனசாலேயும் உடம்பாலேயும் நாங்கள் அனுபவிச்சு முடிச்சிட்டோம்.

நான் ஒருத்தன் மட்டுமில்லே

பன்னீர் செல்வம்

பல்லாயிரக்கணக்கானவங்க இந்தக் கொடுமையை அனுபவிச்சாங்க.

பிழைக்கப்போன தேசத்திலே எத்தனையோ சோதனைகளை அனுபவிச்சிருக்கிறேன். பொருள்களை இழந்திருக்கிறேன். நண்பர்களைப் பறிகொடுத்து அழுதிருக்கிறேன்.

ஆனா,என் ஜென்ம பூமியிலே என் ஆன்மாவுக்கு இழைக்கப்பட்ட அநீதியையும் அவமானத்தையும் என்னாலே தாங்க முடியல்லே குடிக்க ஆரம்பிச்சேன் குடிச்சுக் குடிச்சே என்னை அழிச்சுக்கிறதுன்னு தீர்மானிச்சேன்..."

அவன் தன்கதையை முடித்த போது இருளிலும் குளிரிலும் பூமி உறைந்து போயிருந்தது. பிறந்த மண்ணிலே அநாதையாகிப் போய் தெருவிலே கிடக்கிறேன்.

இது ஏன் சார்? நான் யார்? தமிழனா? இந்தியனா? என் தேசம் எது? எதுவுமே இல்லேன்னா நான் யார்? சொல்லுங்க சார்?

இரவின் இதயத்தை குத்திக் கிழிப்பதுபோல ஆக்ரோஷமாக கேட்டது அவன் குரல்.நான் அவனது கையை இறுகப்பற்றி "அசாதாரணமான மனிதன்!" என்றேன்.

நடுங்கும் கைகளால் என் முகத்தை வருடினான் அவன்.நான் இரவு ரீக்கடைக்குப்போய் ரீயும் ரொட்டியும் வாங்கிக்கொண்டு திரும்பி வந்து குரல் கொடுத்து அழைத்தேன் பதில் இல்லை.

ஜென்மம் முடித்துப் போயிருந்தான் அவன்.

# இன்று ஒரு தகவல்

## சாப்பிட மறுக்கும் குழந்தைகள்

அம்மாமார்களுக்கு அடிக்கடி ஏற்படும் கவலை ஒன்று உண்டு. அதாவது குழந்தை சரியாகச் சாப்பிடுவதில்லை என்ற கவலை. இவர்கள் எல்லாம் ஒருவிடயத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். குழந்தைகள் பெரியோர் போன்று இல்லை .அவர்கள் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்து விட்டுச் சாப்பிட உட்காரும் ரகம் இல்லை. பசித்தால் உண்பார்கள். இல்லாவிட்டால் விளையாடுவார்கள். இல்லாவிட்டால் நித்திரை செய்வார்கள்.

அதுபுரியாமல் அவர்களைக் கட்டாயப்படுத்தி அல்லது மிரட்டி சாப்பிடவைப்பது சரியான தவறு. எட்டுமாதக் குழந்தை க்கு மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருமுறை பசிக்கும். அந்தநேரம் பார்த்து உணவுகொடுத்தால் அடம் பிடிக்காமல் சாப்பிடும்.

அதே குழந்தைக்கு ஒருவயது ஆகின்றபோது நான்கு மணித்தியாலத்திற்கு ஒருமுறை பசிக்கும். இந்த வயதில் இயற்கையாகவே பசிகுறைந்திருக்கும் அதுபுரியாமல் "என் குழநதை முன்புபோல சரியாக உண்ணமாட்டேன் என்கிறான்" என்று சில டாக்டரிடம் போய் கூறிக்கொண்டிருப்பார்கள்.

இன்னொரு விஷயம் ஒரு குழந்தைக்கு வயது அதிகரிக்கும் வேகத்திற்கு உடல் எடை அதிகரித்துச் செல்லாது. உடல் எடை அதிகரிக்கும் வேகம் குறைவடைந்து கொண்டு வரும். 6 மாதக் குழந்தைக்கு ஒருவாரத்தில் 150 கிராம் எடை அதிகரிக்கும்.

ஒருவயதில் வாரத்திற்கு 71கிராம் எடை கூடும். இது புரியாமல் அதிகமான உணவைக்கொடுத்து குழந்தையைக் கஷ்டப்படுத்தக் கூடாது. ஏனென்றால் அளவுக்கு மீறிய உணவு அஜரணத்தை உருவாக்கிவிடும்.குழந்தைக்கென்று ஒரு தட்டில் உணவை சிறிதளவு வைத்துக்கொடுக்க வேண்டும். மலைபோல் உணவைக் குவித்து வைத்தால் அதைப்பார்த் ததுமே பசி அடங்கிவிடும்.

அடித்துமிரட்டி பயமுறுத்திச் சாப்பிடவைக்கும் பழக்கத் திற்கு **Food Forcing** என்று பெயர். இப்படிச் செய்தால் குழந் தைக்கு உணவில் விருப்பம் குறைந்து விடும். உணவைக் கண்டால் வெறுக்கத் தொடங்கிவிடும்.

உளம் சார்ந்த பசிக்குறைவு. **Psychogenic anorexia** ஏற பட்டுவிடும்.உணவு என்பதே ஒரு தண்டனை போல் தோன்றும். குழந்தைகளுக்குப் பிடித்த உணவைக் கொடுக்க வேண்டும். சத்து அதிகம் இருக்கின்ற தென்பதற்காக அதற்குப் பிடிக்காத உணவைக் கொடுத்துக் கட்டாயப்படுத்தக் கூடாது.

குழந்தைகளுக்கு 2 வயது ஆகும் போது இயற்கையாகவே எதிர்மறைக் குணம் உருவாகும். இந்தச் சமயத்தில் நாம் என்ன கூறுகின்றோமோ அதற்கு நேர்மாறாக நடக்கும். ஏட்டிக்குப் போட்டி. சாப்பிடச் சொன்னால் விளையாடச் செல் லும். விளையாடச் சொன்னால் சாப்பாடு கேட்கும். இதைப் புரிந்துகொண்டு நடக்க வேண்டும். குழந்தை நாம் கூறுவதைக் கேட்கவில்லையே என்று கோபப்படக் கூடாது.

குழந்தை வளர வளர பிடிவாதக் குணம் வருவது சகஜம். கேட்டதை வாங்கிக் கொடுத்தால்தான் சாப்பிடுவேன் என்று பிடிவாதம் பிடிக்கும். வாங்கிக்கொடுப்பது தான் உத்தமம். நீங் களும் பிடிவாதம் பிடிக்கக் கூடாது ஏனென்றால் "கேட்டது கிடைக்கவில்லையே" என்ற ஏமாற்றம்கூட குழந்தையின் பசியைக் குறைத்துவிடும். கேட்டது கிடைத்து விட்டால் பசி அதிகமாகும் மளமள வென்று உண்டுவிடும்.

குழந்தைகளுக்குக் கண்டநேரத்தில் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்தால் சாப்பாட்டு நேரத்தில் சாப்பிடாமல் அடம்பிடிக்கும். பள்ளி செல்லும் பிள்ளைகள் காலை உண வைச் சரியாக உண்ணமாட்டார்கள். பள்ளிசெல்வதற்கு முக்கால் மணித்தியாலத்திற்கு முன்பே அவர்களுக்கு உணவு கொடுத்துவிடவேண்டும்.

படிக்கும் பிள்ளைகள் உடல் சோர்வு, உளச்சோர்வு போன்ற காரணங்களாலும் சாப்பிட மறுப்பார்கள். உதாரணமாக விளையாடிவிட்டுவரும் பிள்ளைகள் உணவை வேண் டாம் என்பார்கள். இது உடல் சோர்வு.

நீண்டநேரம் வீட்டுப் பாடங்களை செய்து கொண்டிருக்கும் பிள்ளைக்குச் சரியாக சாப்பிட முடியாது.இது உளச் சோர்வு, இவைதவிர குழந்தைகளுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டாலும் சாப்பிடமறுப்பதுண்டு. சில மருந்துகளும் பசியைக் குறைத்துவிடும். அதனால் சரியாகத் தெரிந்து கொண்டு குழந்தைகளைச் சாப்பிட வைக்க வேண்டும். அது புாியாமல் கையில் சாப்பாட்டுத் தட்டை வைத்துக் கொண்டு விரட்டக் கூடாது.

ஒரு சிறுவன் கூறினான் "எமது அம்மா சாப்பாடு போடுவது தெரிந்தால் நான் வீட்டைவிட்டு உடனே வெளியில் ஓடிப் போய் விடுவேன்" என்றான். ஏன்? என்று கேட்டேன் "எங்கள் அப்பா கூட அப்படித்தான் செய்வார்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# இலங்கையை அண்மித்த கடற்பரப்பில் கன்னிப் பயணத்தை மேற்கொண்ட ஸ்பானியக் கப்பல் மாயம்

(கொழும்பு)

ஸ்பெயின் நோக்கித் தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்ட ஸ்பெயின் அரசிற்குச் சொந்தமான புதிய கப்பலொன்று இலங்கையை அண்மித்த கடற்பரப்பில் காணாமல் போயுள்ளது.

12 மாலுமிகளுடன் சென்று கொண்டிருந்த இந்தக் கப்பல் சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் வைத்தே காணாமற் போயுள்ளது.

கடநத திங்கட்கிழமை காலித் துறைமுகத்தை வந்தடைய வேணடிய இந்தக் கப்பல் இற்றைவரை எநத வித ரேடியோத் தொடர்பையும் மேற்கொளளாததாலேயே இது காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

இறுதியாக இக் கப்பல் இந்திய சமுத்திரமும், பசுபிக் சமுத்திரமும் சங்கமிக்கும் மலாக்கா நீரிணையில் வைத்தே ரேடியோத் தொடர்பை மேற்கொண்டிருந்தது . இக்கப்பலில் இருந்த மாலுமிகளில் 10 பேர் ஸ்பானியர்கள் என்றும் ஏனைய இருவரும் பிற நாட்டவர்கள் என்றும் தெரியவருகிறது.

ஸ்பெயினிற்கும் மொராக்காவிற்கும் இடையிலான போக்குவரத்திற்கென ஸ்பானிய அபிவிருத்தி அமைச்சகத்தால புதிதாக வடிவமைக்கப்பட்ட இக் கப்பல் 500 இருக்கைகளைக் கொண்டது எனவும், வடிவமைக்கப் பட்ட இடத்திலிருந்து ஸ்பெயினிற்கான தனது கன்னிப் பயணத்தை இது மேற்கொண்டிருந்த வேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்குப் பின்னர் இக் கப்பலில் இருந்து எந்தவித ரேடியோச் சமிக்ஞையும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரியவருகிறது.

இந்தக் கப்பலைத் தேடும் பொருட்டு ஸ்பெயின் ஒரு மீட்புக் குழுவை அனுப்பியுள்ள அதேவேளை இக் கப்பலின் பயணப்பாதைக்கு அருகிலுள்ள நாடுகளடமும் இக் கப்பலைப் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இராஜதந்திர ரீதியாக கோரியுள்ளது. (18,10)

# 1 கோடியே 20 இலட்சம் ரூபா கடனுடன் பனைதென்னை அபிவிருத்தி சங்கத்திடம் திக்கம் வடிசாலை கையளிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபையால நிர்வகிக்கப்பட்டு வந்த திக்கம் மதுபான வடிசாலை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வடிசாலையின் மேம்பாடுகளை மையமாகக் கொண்ட ஒன்பது நிபந்தனைகளின் அடிப்படையிலேயே பனை அபிவிருத்தி சபையால் இது பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சுமர் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபா பெறுமதியுடைய மதுசார வகைகளுடன் பனைதென்னை வள அபிவிருத்திச் சங்கம் ஒப்படைக்கப்பட்ட இவ் வடிசாலையின் பெயரில் ஒருகோடியே 20 இலட்சம் கடன் நிலுவை இருப்பதாகவும் இவையாவும் வடி சாராயத்தை உற்பத்தி செய்வதற்கான கள்ளினை கொள்வனவு செய்து அதற்குரிய பணத்தை திருப்பிச் செலுத்தாததினால் ஏற்பட்ட கடன் தொகை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பனை அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு மீளளிக்கப்பட வேண்டிய இக் கடன் தொகையை மீள் அளிப்பதில் பெரும் சிக்கல்களையும் பனைதென்னை வள அபிவிருத்திச் சங்கம் எதிர்கொண்டு வருகின்றது.

இதனால் பாரிய நட்டத்திலேயே திக்கம் வடிசாலை தற்பொழுது இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதன்காரணமாக இங்கு பணியாற்றி வரும் ஊழியர்களின் மேம்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (4,16)

# இராசி பலன்

**21.05.2004**

**(வைகர்சி 08,வெள்ளிக்கிழமை)**

**துதியை பி.ப 2.21 மணிவரை**

**மிருகசீரிடம் பின்னிரவு 2.13மணிவரை**

**இராகுகாலம் 10.22-11.52மணிவரை**

**சுபநேரம் 5.52-7.22 மணிவரை**

### மேடம்
எடுத்த கருமங்கள் கைகூடும், கீர்த்தி, செய்தொழில் விருத்தி,சகோதரர் உதவி.

### இடபம்
கடின வார்த்தை, பணவிரயம், கௌரவக் குறைவு, காரிய தாமதம்.

### மிதுனம்
தெய்வ சிந்தை,நல்ல முயற்சி, பிரயாண நன்மை, சயன சுகக்குறைவு.

### கடகம்
அமைதிக்குறைவு, புத்தி சாதுரியம், காரிய அலைச்சல், திடீர் நன்மை.

### சிங்கம்
தெய்வ தரிசனம், கலந்துரையாடல், உற்சாகம், காரிய அனுகூலம்.

### கன்னி
தொழிலில் ஆர்வம், அதிகாரம், காரிய சிந்தை, பிரயாணம்.

### துலாம்
கட்டுப்பாடு, எதிர்பாரத செலவு, புதிய திட்டமிடல், நல்லமுயற்சி.

### விருச்சிகம்
குடும்பக்கவலை, வீண் பிரச்சினை, தொழில கஷ்டம், காரிய தடங்கல்.

### தனுசு
முயற்சி கைகூடும், தெய்வதரிசனம், கௌரவமான நிலை, அபூர்வ சந்திப்பு.

### மகரம்
ஆரோக்கியம், உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், நல்ல செய்தி.

### கும்பம்
சொத்துக்களால் கவலை, காரிய தாமதம், உடல் நலக்குறைவு, பணவிரயம்.

### மீனம்
கற்பனை மிகுதி, முயற்சி தாமதம், மாதா சுகம், தொழிலில் ஆர்வம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

***வளவன்***

# ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 56வது ஆண்டு நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 56வது ஆண்டு நிறைவு விழாவை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாளை முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை யான 3 நாள் நிகழ்வாக இவ்விழா கொண்டாடப் படவுள்ளது.

இந்நிகழ்வுகளின் போது மைதான மெய்வல்லுநர் போட்டிகள், துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டிகள், மரதன்ஓட்டப்போட்டிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

இறுதிநாள் விழாவில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இப் பரிசளிப்பு விழாவில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், ஓய்வுபெற்ற நீதவான் மு. திருநாவுக் கரசு, யாழ. மத்திய கல்லூரியின் அதிபர் க.இராஜ துரை ஆகியோரும் அதிதிகளாக கலந்துகொள்வர். (4)

# அரியாலையில் சங்கிலியன் படையின் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அாியாலைப்பகுதியில் உள்ள சில இடங்களில் சங்கிலியன படையினரின் எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் கலாசார சீரழிவுகள் மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தீவிரமாக செயற்பட்டு வரும் இச் சங்கிலியன் படையின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை மேற்படி பகுதி மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

கலாசாரத்தை சீரழிக்கும் செயல்களிலும் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுவோரை எச்சரிக்கும் விதமாக அமைந்துள்ள இச் சுவரொட்டிகள் அரியாலையில உள்ள நாலாம் சந்தி, நொத்தாரிசு வீதி, கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மதில்கள் மற்றும் கனகரத்தினம் வீதிச் சந்தி ஆகிய பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. (4,16)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(திருகோணமலை)

கல்முனைப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெறற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார். இரவு 8.00 மணியளவில் இடம் பெற்ற இத் துப்பாக்கிச்சூட்டினை மோட்டார் சைக்கிளில் வந்த இரு ஆயுததாரிகளே நடத்தியிருப்பதாக கல்முனைப் பொலிஸாா தெரிவிககின்றனா். இச்சம்பவம் தொடா்பாக பொலிஸாா் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4,63)

# கிருபானந்த வாரியார் வாழ்க்கை வரலாறு

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

## நாடு

அறிவு இரண்டு வகையினால் வளர்ச்சி பெறுகிறது. ஒன்று பல கலைகள் பயில்வதால. மற்றொன்று பல நாடுகளைச் சுற்றிப் பார்ப்பதால். பழங்காலத்தில் விமானம், புகைவண்டி, கார் முதலிய வசதிகள் கிடையா. அக்காலத்தில் நடந்தே ஊர் ஊராகச் சென்று தமிழ்ப் பணி செய்த ஔவையார் நாடுகளைப் பற்றி அடியில் வரும் பாடலைப் பாடினார்.

**வேழ முடைத்து மலைநாடு மேதக்க**
**சோழ வளநாடு சோறுடைத்து-பூமியர்கோன்**
**தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயல்தொண்டை**
**நன்னாடு சான்றோ ருடைத்து**

மலைநாடு யானைகளை உடையது. சோழ நாட்டைக் குறிக்க வந்த ஔவையார் "மேதக்க" என்ற அடைமொழியை இட்டுப் புகழ்கின்றார். "சோழ வள நாடு சோறுடைத்து" என்ற சொற்றொடருக்கு, சோறு என்ற உணவைக் குறிக்கும் என்று பொருள் கொள்வர்.

இப்பொருள் சிறப்புடையதாகாது. காவிரி பாய்வதால் சோழநாடு கன்னலும் செந்நெலும் விளைச்சலை உடையது என்ற கருத்தில் அவ்வாறு கூறுகின்றார்கள். ஒரு நாட்டுக்குச் சோற்றால் மட்டும் பெருமை ஏற்பட்டுவிடாது.

சிதம்பரமும், திருவரங்கமும், சுவாமிமலையும், திருவாரூரும், வயலூர் முதலிய திருத்தலங்களும் சோழநாட்டில் விளங்குகின்றன. "சோறு" என்ற சொல்லுக்கு "முத்தி" என்ற பொருள் உண்டு.

"பாதகமே சோறு பற்றியவா தோணோக்கம்" என்ற மாணிக்க வாசகர் திருவாக்கில் "சோறு என்ற சொல் 'முத்தி' என்ற பொருளில் கையாளப்படுவதை அறிக. ஆதலால் சோழ வளநாடு சோறுடைத்து என்ற சொற்றொடருக்கு சோழநாடு முத்தி நலத்தை வழங்குவது என்ற பொருள்படும்.

நவமணிகளில் சிறந்தது முத்து, மற்ற மணிகள் சாணை கொடுத்தால் தான் ஒளி உண்டாகும். முத்து பிறவியிலேயே ஒளியை உடையது. அதுபோல் பிறவியிலேயே ஞானத்தை உடைய பெருமக்கள் அவதரித்த நாடு பாண்டிநாடு. மாணிக்க வாசகர், நம்மாழ்வார், ஆண்டாள் முதலிய மகான்கள் அவதரித்தது அந்நாட்டிலன்றோ!

ஔவையார் தொண்டை நாட்டைக் குறிக்கும் பொழுது கோபுரத்தின் உச்சியில் தங்கக் கலசம் வைப்பதுபோல் தொண்டை நன்னாடு பல சான்றோர்களை உடையது என்று கூறியது, மிகவும் பெருமைக்குரிய நாடு தொண்டை நாடு என்பது போதரும்.

வள்ளியம்மையார் அவதரித்த நாடு தொண்டை நாடு அன்றி கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள், ராமானுஜாச்சாரியார், முதலாழ்வார் மூவர்கள், கூரத்தாழ்வார், சேக்கிழார் பெருமான் கச்சியப்ப முனிவர், பரிமேலழகர், சிவப்பிரகாச சுவாமிகள், புகழேந்தி முதலிய பல சான்றோர்கள் இந்த நாட்டில் அவதரித்தார்கள்.



அண்மையில் ஸர்.ஸி.பி. ராமசாமி ஐயர், ஸர்.ராதாகிருஷ்னன், ஸர்.ஏ.ராமசாமி முதலியார், டாக்டர் மு.வரதராசனார் முதலிய சான்றோர்களும் இந்த நாட்டில் தோன்றினார்கள்.

தொண்டை நாட்டைப் பற்றிச் சொல்ல வந்த சேக்கிழார் பெருமான்,

**"தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தை**
**தூய மாந்தர்வாழ் தொண்டை நாட்டியல்புசொல் வரைத்தோ"**

என்று கூறுவதனால் தொண்டை நாட்டின் பெருமையை உணர்க.

## நகரம்

இத்தகைய வித்தகத் தொண்டை நாட்டில் வேலூருக்கும், காட்பாடிக்கும் இடையில் ஒரு கல் தொலைவில், பாலாற்றங் கரையில் விளங்குகின்ற திருத்தலம், காங்கேயநல்லூர்.

சிவபெருமானுடைய ஆறு நெற்றிக் கண்களில் தோன்றிய ஆறு அருட்பெரும் ஜோதிகள் சிறிது நேரம் கங்கையாற்றில் தவழ்ந்து சரவணப் பொய்கை சேர்ந்து ஆறுமுகத் தெய்வமாக ஆயிற்று. அதனால், அப்பரமபதி காங்கேயன் என்று பேர் பெற்றான். காங்கேயனுக்கு இது நல்ல ஊராக விளங்குவதனால் "காங்கேயநல்லூர்" என்ற பேர் பெற்றது. காங்கேய நல்லூர் என்றாலே வாய் மணக்கும். சில ஊர்களுக்கு எருமைப் பட்டி, மேட்டுப்பட்டி, பள்ளப் பட்டி என்ற பெயர்கள் வரும். இந்த ஊர் முருகன் திருப்பெயரால் அமைந்த சிறப்புடையது.

நல்ல நீர்வளமும், நிலவளமும் உடையது. கன்னலும், செந்நெலும், சோலைகளும் சூழ இயற்கை அழகுத் தெய்வம் கொலுவீற்றிருக்கும் இனிய தலமாகும். இத்தலத்திலுள்ள முருகப்பெருமானை நாரத முனிவர் வழிபட்டு நலம் பெற்றார். இந்த ஊரில் இளமுலை நாயகி சமேத காங்கேசர் என்ற சிவாலயமும், சுந்தரவரதராஜப் பெருமாள் திருக்கோயிலும் அழகு செய்கின்றன.

இத்திருத்தலத்தில் பாதி இரவிற்கு மேல் வேதியர்கள் செய்யும வேத ஒலி மக்களைத் துயில் உணர்த்தும் என்று என்னுடைய தந்தையார் ஒருமுறை கூறியுள்ளார். அன்பர்கள் பலர் பஜனை கோஷ்டிகளாகச் சென்று வீதிகள் தோறும தமிழ் முழக்கம் செய்வார்கள்.

இங்கு முருகப் பெருமானுடைய திருக்கோயில் மிகவும் புகழ்பெற்றது. கார்த்திகை தோறும் வேலூரிலிருந்தும் வேற்றூரிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபாடு செய்கிறார்கள். ஆடிக் கார்த்திகையில் காவடிகள் பல வந்து காட்சிகள்தரும். மாட்சி கண்களுக்கு விருந்தாக இருக்கும். கந்தர் ஷஷ்டி நல்விழாவும், மாசிப் பெருவிழாவும் சிறப்பாக நடைபெறும்.

சிறிய ஊராக இருப்பினும் அரிய பெரிய நலங்களை உடையது. அந்தணர்கள் வாழ்கின்ற அக்கிரகாரமும், சைவ வேளாண மக்கள் வாழ்கின்ற வீதியும், செல்வந்தர்கள் வாழ்கின்ற நெடுந்தெருவும் இந்த ஊரை அலங்கரிக்கின்றன. பாலாறு அருகில் ஓடுவதனால் வற்றாத நீர் வளமும், பார்வளமும் மிகுதியாக இருக்கின்றன. செழிப்பான இத்தலத்தை விரும்பாதார் யார்? நல்ல உள்ளம் படைத்தவர்கள் இந்த ஊரில வாழ்கின்றார்கள். ஊருக்கு நடுவில் முருகன் கோயில் கண்கொள்ளாத காட்சியாகக் கவின் செய்கின்றது.

*(தொடரும்)*

# இன வன்முறைகளைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படைப் பிரிவுகளில் இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

நாட்டில் இன வன்முறைகள் அதிகரிப்புக்கு பொலிஸ் உட்பட பாதுகாப்புப் படைப்பிரிவுகளில் இனவிகிதாசார நடைமுறை பேணப்படாமையே காரணம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கந்தப்பொல வன்முறைச்சம்பவம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உறையாற்றும் போதே இக் கருத்தினைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் இனரீதியான வன்முறைகளில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கும் போது சிறுபான்மையினரை இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்கவேண்டிய சூழல் ஏற்பட்டு வருகின்றமை துரதிஸடவசமானது.

இவ்வாறான நிலைமைகளை தவிர்க்க வேண்டுமாயின் இன விகிதாசார அடிப்படையிலான ஒருபொலிஸ் பிரிவு அமைக்கப் படல் வேண்டும்.அத்துடன் கந்தப் பொல வன்செயல்கள் இலங்கையின் வரலாற்றில் ஒரு கறுப்புப் புள்ளி என்றும் அவர் தெரிவித்தார். (த-121)

# மன்னாரில் கருத்தரங்கு மீன்பிடியியல் நடைபெற்றது

(மருதங்கேணி)

மன்னார் பிரதேச மீனவர்களுக்கான ஆழ்கடல் மீன்பிடி பற்றிய கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை மன்னார் மீன்பிடி திணைக்கள அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் மாவட்ட மீன்பிடி விரிவாகக அதிகாரி ஹயூம் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சூசை ஆனந்தன் மற்றும் அரச அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சூசை ஆழ்கடல் மீன்பிடியியல் நவீன முறைகளைக் கையாளும் வகை பற்றியும், இதன் மூலம் கிடைக்கப்பெறும் வருவாய எந்த அளவுக்கு அதிகாிக்கும் என்பது பற்றியும் விளக்கமளித்தார். (4-35)

# சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து கிழக்கில் பாதுகாப்புத் தீவிரம் மக்களின் இயல்பு நிலை பாதிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினரை இலக்கு வைத்து இடம்பெற்றுவரும துப்பாககிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து அங்கு தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் அங்கு புலனாய்வுத்துறையினரது கடமைகளையும், இராணுவத்தினரது ரோந்து நடவடிக்கைகளையும் அதிகரிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ் ஆலோசனையின் பெயரில் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக அப்பகுதிகளில் இயல்புநிலை பாதிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, அண்மைக் காலமாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு தானும் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (60,4)

**அன்பு வாசகர்களே!**

**ஊர்த்தரிசனப் பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகிறது. உங்கள் ஊரில் நிலவும் நிறை குறைகளை எழுதி, உங்கள் ஊருக்குப் புத்துயிர் அளியுங்கள். உங்கள் ஆக்கங்களைப் புகைப்படங்களுடன்,**

**ஊர்த்தரிசனம்**
**வலம்புரி**
**இல.15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.**

# ஜப்பானிய தூதுவர் அகாஷி இந்தியாவுக்கு திடீர் விஜயம்

(கொழும்பு)

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி நான்கு நாள் இலங்கை விஜயத்தைப் பூர்த்தி செய்துகொண்டு நேற்று இந்தியா சென்றுள்ளார்.

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது பற்றி புதுடில்லியில் உள்ள உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.



ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கையில் தங்கியிருந்த சமயத்தில் பிரதமர் மகிநத ராஜபக்ஷ , ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தமிழ்,முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசியதுடன், சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரமபிக்க வேண்டும் என சகல தரப்பினரிடமும் வலிறுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது. (60,10)

# பிரதமர் பொறுப்பை ஏற்க சோனியா மறுத்தது அரசியல் மதி நுட்பத்தைக் காட்டுகிறது

## பிரித்தானிய நாளிதழ்கள்

(லண்டன்)

பிரதமராக பொறுப்பேற்க சோனியா மறுத்தது அவரது மதிநுட்பத்தைக் காட்டுகிறது என்று ஆங்கில நாளிதழ்கள் கூறியுள்ளன.

லண்டனிலிருந்து வெளியாகும் 'தி டைம்ஸ்' நாளிதழ் தலையங்கத்தில் கூறியுள்ளதாவது,

சோனியா எப்போதுமே தயக்கமான அரசியல்வாதி. ஆனால், பிரதமராக அவர் பொறுப்பேற்காதது, இந்திய அரசியலில் மற்றுமொரு திருப்புமுனையாக அமைந்தது. பிரதமருக்கு உரிய பொறுப்புகளைக் கண்டு அவர் தயங்கவில்லை. இது சோனியாவுக்கு எதிராக அணிவகுத்துள்ள அரசியல் கட்சிகளின் மற்றும் தற்போதைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் மதிப்பீடு.

காங்கிரஸ் கட்சியின் எம்.பி.க்கள் அனைவரும் சோனியாவுக்குப் பின்னால் நம்பிக்கையுடன் நின்றபோதும் தான் வெளிநாட்டில் பிறந்தவர் என்ற எதிர்ப்பால் நாட்டு நலனுக்குத் தீங்கு ஏற்படாத வகையில் துணிச்சலாக எடுத்த முடிவினால் எளிதாகக் கவரப்பட்டார். அவர் தலைமைப் பொறுப்பேற்க வேண்டி கட்சியிலுள்ள சிறிய மற்றும் பெரிய தலைவர்கள் பலர் செய்த நீண்ட முயற்சிக்குப்பின் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்க பத்திரிகையான நியூயோர்க் டைம்ஸ் தலையங்கத்தில் வர்ணித்துள்ளதாவது,

இந்தியாவின் அடுத்த பிரதமராக மன்மோகன் சிங் நியமிக்கப்பட்டுள்ளது இந்திய மார்க்கெட்டின் நிதி நிலை சரிவை துாக்கி நிறுத்தும். இவர் கொள்கைவாதியாக மட்டும் இல்லாமல் காரியவாதியாகவும் இருபபார். இவரது சீர்திருத்த முயற்சி நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. தேர்தல முடிவுகளின்படி, தனியார் மயத்தை நிறுத்தி வைக்க வேண்டும் மற்றும் கிராம மக்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்று கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் இடதுசாரி கட்சிகள் திடீர் போர்க்கொடி தூக்குவதைச் சமாளிக்க வேண்டும். மொத்தத்தில் கவர்ச்சிகரமான மாற்று பிரதமர் மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத்தக்கது.

மன்மோகன் சிங் பிரதமராக நியமிக்கப்பட்ட பின் கடந்த சில நாட்களாக வீழ்ச்சியடைந்த பங்கு மார்க்கெட் நிலவரம் இனி முன்னேற்றம் பெறும் என்பதில் ஐயமில்லை என்று தெரிவித்துள்ளது.

## இந்தியர் நடத்தும் உணவு விடுதிக்கு பிரிட்டனில் சிறப்பு விருது

(லண்டன்)

பிரிட்டனின் சிறந்த உணவு விடுதிக்கான விருதை இந்தியர் நடத்தும் மதூஸ் வென்றுள்ளது.

2004ஆம் ஆண்டுக்கான கோப்ரா குட் கரி கைட் விருதை மதூஸ் உணவு விடுதியின் நிர்வாக இயக்குநர் சஞ்சய் ஆனந்த லண்டனில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் பெற்றுக் கொண்டார்.

பிரிட்டனின் மிகச்சிறந்த ஆசிய உணவு ஏற்பாடு நிறுவனமாகவும் (அவுட்டோர் கேட்டரிங்) மதூஸ் விளங்குகிறது. பஞ்சாபி உணவு வகைகளுக்கும், கென்ய - ஆசிய கலப்பு உணவு வகைகளுக்கும் இந்த உணவு விடுதி பெயர் பெற்றது.

17 வயதில் இந்த உணவு விடுதியை சஞ்சய் ஆனந்த் தொடங்கினார். இதன் தலைமை சமையல்காரராக அவருடைய தாய் இருந்தார். மிடிலெக்ஸில் உள்ள 36 இருக்கை வசதிகளைக் கொண்ட இந்த உணவு விடுதிக்கு, லண்டனில் உள்ள பல பிரபலங்கள் நிரந்தர வாடிக்கையாளர்களாக உள்ளனர்.

விருது வழங்கும் விழாவில் பிரபல தொழிலதிபர் லார்ட் சுவராஜ்பால் உள்ளிட்ட 600க்கும் மேற்பட்ட பிரபலங்கள் கலந்து கொண்டனர்.



சிட்னியில் நடைபெற்ற "தி ஸ்லீப்பிங் ப்யூட்டி ஐஸ்" என்ற கலை நடன நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட புகைப்படம்.

## பெனார்சிபூட்டோ மீண்டும் பாகிஸ்தான் வருகிறார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் நாட்டிற்குத் திரும்புவது தொடர்பாக தனது கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளை முன்னாள் பிரதமர் பெனார்சிபூட்டோ சந்தித்துப் பேசுகிறார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனார்சிபூட்டோ 1996 ஆம் ஆண்டில் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.லண்டனில் அடைக்கலம் புகுந்தார். தற்போது இவர் நாடு திரும்ப திட்டமிட்டுளளார். இது பற்றி கட்சியினரிடம கருத்துக் கேட்க முயற்சித்து வருகிறார். இது தொடர்பான செய்தி பாகிஸ்தானின் 'தி நேஷன்' பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

அப்பத்திரிகையில் வெளியான செய்தியில், 'பாகிஸ்தானுக்கு பெனார்சி திரும்ப இருப்பது பற்றி கட்சி நிர்வாகிகள் மற்றும் தலைவர்களிடம் கருத்து கேட்கபபட்டு வருகிறது. பாகிஸ்தான் வர ஏதுவாக மக்கள் ஆதரவைத திரட்டவும் முயற்சித்து வருகிறார்' என்று கூறப்பட்டுள்ளது. மாகாண ரீதியில் கட்சி ஆலோசனைக் கூட்டத்தில் பரிமாறப்படும் கருத்துக்கள் லண்டனில் உள்ள பெனார்சி பூட்டோவிடம ஜூன் ஒன்று முதல் 17ஆம திகதி வரை தெரிவிக்கப்படும். இதையடுத்தே இவரது நடவடிக்கைகள் இருக்கும் என்று கூறப்படுகிறது.

## அப்பாவி உயிர்களுக்கு மதிப்பளிக்க இஸ்ரேலியரிடம் புஷ் வேண்டுகோள்

(வாஷிங்டன்)

பொறுமையுடன் நடந்து கொண்டு அப்பாவி உயிர்களுக்கு மதிப்பு அளிக்கும்படி அமெரிக்க அதிபர் இஸ்ரேலியர்களைக் கேட்டுள்ளார்.

காசா முனையில் இஸ்ரேலியர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அட்டூழியங்களைக் கண்டே இஸ்ரேலியரிடம் அமெரிக்க அதிபர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

கடந்த இரண்டு நாட்களாக இஸ்ரேல் பாலஸ்தீனியர் மீது மேற்கொண்ட கவசப் பீரங்கித் தாக்குதல்கள், ஹெலிகொப்டர் தாக்குதல்கள் போன்றவற்றால் இறந்தவர்களின் எண்ணிக்கை 33 எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க அதிபர் புஷ் இஸ்ரேலைக் கடுமையாக விமர்சித்த போதும் அந்த நாட்டை கண்டிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கைதிகள் துன்புறுத்தல் படங்கள் மேலும் வெளியாயின

(வாஷிங்டன்)

ஈராக்கின் அபுபிரேக் சிறைக் கூடம் தொடர்பான மேலும் பல படங்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க இராணுவத்தால் நிர்வகிக்கப்படுவது ஈராக்கியக் கைதிக்ள் படுமோசமாகத் துன்புறுத்தப்படும் இடமுமான சிறை பற்றிய மேலதிகப் படங்களே வெளியாகியுள்ளன.

24 படங்கள் வெளியாகியுள்ளன என்றும், இவற்றில் ஏற்கனவே 13 படங்கள் சர்வதேச ஊடகங்களில் வெளியாகியுள்ளன. வெளியாகாத 11 படங்கள் இப்பொழுது வெளியாகியுள்ளன. இவைகள் பற்றிய விசாரணைகள் நடைபெறவிருக்கின்றன.

## ஈராக்கில் அமெரிக்க வீரர் அடித்துக் கொல்லப்பட்டார்

(பக்தாத்)

பக்தாத் நகரின் மேற்குப் பகுதியில் உள்ள அல் அன்பர் பகுதியில் அமெரிக்க படை வீரர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். இத்தகவலைத் தெரிவித்த அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி, அடித்துக் கொல்லப்பட்ட மிகச் சரியான இடத்தை வெளியில் சொல்ல முடியாது. அதேபோல் அந்த வீரர் எந்த வகையில் அடித்துக் கொல்லப்பட்டார் என்பதையும் வெளியிட மறுதது விட்டார். எனினும், அல் அன்பர் எனப்படும் அந்தப் பகுதியில் பலூஜா மற்றும் ரமடி ஆகிய முக்கிய நகரங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக் நாட்டிற்குள் அமெரிக்க படைகள் சென்றதிலிருந்து இதுவரை மொத்தம் 574 அமெரிக்க வீரர்கள் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.




இந்த ஆண்டிற்கான மிஸ் யூனிவர்ஸ் அழகிப் போட்டி ஈகுவடோரின் குயிட்டோவில் நடைபெறவுள்ளது. இதனையொட்டி உலக நாடுகளின் அழகிகள் பலரும் ஈகுவடோரில் குவிந்துள்ளனர். போட்டோஸ்வனா மற்றும் ஜேர்மனி அழகிகள் நிருபர்களைச் சந்தித்த போது எடுத்த படம்.

## சீனாவுடன் ஸ்திர உறவு தாய்வான் ஜனாதிபதி

(தாய்வான்)

சீனாவுடன் ஸ்திரத்தன்மையான உறவை வைத்துக்கொள்வது தான் தனது முதல் பணி என்று தாய்வானில் பதவியேற்றுக் கொண்ட ஜனாதிபதி சென்சுயூபியான் தெரிவித்தார்.

நேற்று பதவியேற்றுக் கொண்ட ஜனாதிபதி செய்தியாளர் மத்தியில் பேசுகையில், சீனாவுடன் நமது நாடு என்றும் ஸ்திரமான உறவைப் பேணவேண்டும். அதற்காக எனது பதவிக்காலத்தில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். நேற்றைய தினமே மந்திரிகளும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். சென்சுயூபியான் தாய்வானின் ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டு பதவியேற்றுக் கொண்டுள்ளார்.

## சிவில் நிர்வாகப் பணிக்கு தென்னாபிரிக்காவில் இந்தியர்

(டர்பன்)

சிவில் நிர்வாகம், தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், நர்சிங் உள்ளிட்ட பணிகளில் திறமைவாய்ந்த இந்தியர்களைத் தேர்ந்தெடுத்து பணியில் அமர்த்தப்பபோவதாக தென்னாபிரிக்க அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் மற்றும் ஆபிரிக்க நாடுகளின் சில பகுதிகளில் உள்ள நிபுணர்களையும் தேர்ந்தெடுத்து பணியில் அமர்த்த திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டின் பொதுசேவைத்துறை அமைச்சர் ஜெரால்டின் பிரேஸர் - மோலி கெடி தெரிவித்தார்.

பல்வேறு துறைகளில் திறன் வாய்ந்த தென்னாபிரிக்கா வைச் சேர்ந்த பலர் அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச சென்றுவிட்டதை அடுத்து இந்த முடிவுக்கு அரசு வந்துள்ளது.

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும் - குறள்

வலம்புரி

## தமிழ் எம்.பிகளுக்கு மற்றொரு பாடம்

மிகவும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட உப சபாநாயகர் தெரிவு எதுவித ஆரவாரமும் இன்றி மிகவும் சுமுகமாக ஆளும் கட்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சபாநாயகர் தெரிவில் ஏற்பட்ட இழுபறிகள், சர்ச்சைகள், உப சபாநாயகர் தெரிவிலும் இடம் பெறும் என அனைவரும் எதிர்பார்த்திருந்த வேளையில், ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து ஆளும் கட்சியைச் சேர்ந்த கீதாஞ்சன குணவர்த்தன அவர்களை உப சபாநாயகராகத் தெரிவு செய்துள்ளது.

சபாநாயகர் தெரிவில் இழுபறிப்பட்ட நிலையில் உப சபாநாயகர் தெரிவில் இரண்டு கட்சிகளும் எவ்வாறு ஒத்துப்போயின என்பது ஆராயப்பட வேண்டியதாயினும், சபாநாயகர் தெரிவின் போது எதிர்க்கட்சிக்கு சார்பாக வாக்களித்த தமிழ் கூட்டமைப்பு எம்.பிகள் இது விடயத்தில் ஆழமாக சிந்திக்கவேண்டிய தேவைப்பாடும் உண்டு.

அதாவது, சபாநாயகர் தெரிவில் தமக்கு ஆதரவு தருமாறு தமிழ் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்த ஐக்கியதேசியக் கட்சி, உப சபாநாயகர் தெரிவில் அரச தரப்புடன் தாம் ஒத்துப்போகும் செய்தியை தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு தெரிவிக்காது மறைத்துக்கொண்டது.

உப சபாநாயகர் தெரிவில் அரச தரப்பு வேட்பாளரையா? அல்லது எதிர்க்கட்சியைச் சேர்ந்த வேட்பாளரையா ஆதரிப்பது என்ற முடிவை இறுதி நேரத்தில் எடுக்கலாம் என்று இருந்த தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் நடந்து கொண்ட முறை மிகப்பெரிய அடியாகி விட்டது.

இதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் குறை காண்பது தவறாகும். ஏனெனில் அக் கட்சியை பொறுத்தவரை, சபாநாயகர் தெரிவில் விட்ட குறையை நிவர்த்திக்க உப சபாநாயகர் ஆவது தமது தரப்பில் இருக்க வேண்டும் என எண்ணுவது நியாயமானது.

இதற்காக தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவையும் ஜனாதிபதி சந்திரிகா கோரியிருந்தார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியே கபடத்தனமாக நடந்து கொண்டது.

சபாநாயகர் தெரிவில் தனது கட்சியைச் சேர்ந்த ஒருவரை நிறுத்தி அவரைத் தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவுடன் வெற்றியடையச் செய்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு உப சபாநாயகர் தெரிவில் யாரை நியமிப்பது என்ற சிக்கல் ஏற்பட்டது. உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் நேர்மையான கட்சியாக இருக்குமாயின், தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவரையோ அல்லது, மலையகத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் எம்.பியையோ உப சபாநாயகர் தெரிவில் நிறுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு நிறுத்தியிருந்தால் அவர் நிச்சயமாக வெற்றிபெறுவது உறுதி.

ஆனால் அவ்வாறு ஒரு தமிழரை உப சபாநாயகராக நியமிப்பதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உடன்பாடு இல்லை. இதனாலேயே ஐக்கிய தேசியக் கட்சி உப சபாநாயகர் தெரிவில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

ஆக, தத்தம் தரப்பு பாதிப்படைவதாகவும், அந்தப் பாதிப்பு தமிழர்களுக்கு சாதமாக அமைவதாகவும் இருந்தால், அதற்கு ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதை மேற்போந்த நிகழ்வு உறுதி செய்துள்ளது.

எனவே, உப சபாநாயகர் தெரிவில் நடந்த திருக்கூத்தை தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஞாபகத்தில் கொண்டு எதிர்கால நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்விடயம் ஏற்கனவே இப்பகுதியில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பினும் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் இணைந்து உப சபாநாயகர் தெரிவில் நடத்திய நாடகம் தமிழக் கூட்மைப்பினருக்கும், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், சிங்களப் பாராளுமன்றம் உணர்த்திய மற்றுமோர் பாடமாகும்.

# ஹெல உறுமய பிக்குகள் அனைவரும் தர்மத்திற்காகவே போராடுகிறார்களா?

### வினவுகிறார் வண. சிறீமல்கொல விமலஜோதி தேரர்

(கொழும்பு)

ஹெல உறுமயவின் ஹத்துலுவே ரத்னசீல தேரர் கடத்தப்பட்டமைக்கு பௌத்தர்களின் உரிமைகளைப் பாது காக்கும் இயக்கத்தின் செயலாளர் வண. சிறீமல்கொல விமலஜோதி தேரர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

குளம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்குரிய வாயப்புக் களை நாம் குறுகிய மனப்பான்மையுடைய அரசியல்வாதி களுக்கு வழங்கக்கூடாது. இரண்டாயிரதது 500 வருடகாலமாக பௌத்த வரலாற்றை கொண்டவர்கள் நாங்கள். இது நாம் பெருமையடைய வேண்டிய விடயம்.

நாம் எமது நாட்டை, மக்களைப் பாதுகாக்கவேண்டும். அண்மையில் பிக்குகள் தாக்கப்பட்டனர். தாக்கியவர்கள் பௌத்தத்திற்காக போராடுபவர்களா? உண்மையில் தர்மராச் சியத்திற்காகவே உழைப்பவர்களா? என்ற கேள்வி எழும்பு கிறது.

இந்தத் துறவிகள் மிக மோசமானவர்கள். சில ஹெல உறுமய பிக்குகள் பௌத்த சமூகத்தின் நம்பிக்கையை சிதைத்துள்ளனா. இந்தப் பிக்குகளை தாக்கியதன் மூலம் தெளிவாகியுள்ளது.

இச் சம்பவத்தில் ஹெல உறுமயவினரும் ஐக்கிய தேசியககட்சியினரும் சம்பந்தட்பட்டுள்ளனர். இவர்கள் வெளிப் படையாகவே புத்தரின் போதனைகளின்படி தண்டிக்கபட வேண்டியவர்கள் என வண. சிறமல்கொல விமலஜோதி தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

### அரசியல் அமைப்பு மாற்ற முயற்சிகளில்

# புலிகளையும் புதிய அரசாங்கம் சமபங்காளிகளாக ஏற்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யப்படும் போது அதற்குப் புலிகளது பங்களிப்புக்களையும் பெற்றுக்கொள்ள வேணடும் என பேராசிரியர் நிகால் ஜெய விக்கிரம தெரி வித்துள்ளார்..

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு “மக்களும் அரசியலும்” என்ற தொனிப் பொருளில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத நிலையில் கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் அரசியலில் மாற்றத்தை ஏற்படுததுவதற்குரிய மக்கள் ஆணையை அரசிற்குப் பெற்றுத் தந்துள்ளது.

இதேபோலவே இத்தேர்தல் முடிவுகள் விடுதலைப் புலி களுககும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் அமைப்பை மாறறுவதற்கு தற்போதையய அரசு புலிகளது பங்களிப்பை யும் ஏற்கவேண்டும்.

இதுவே சகல இன மக்களது உரிமைகளையும் அனு சரிக்கும் அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு வாய்ப் பளிக்கும்.

மாறாக இவ் அரசியல் அமைப்பு மாற்றங்கள் பெரும் பான்மை இனத்தவர்களது நலனை மட்டும் கருத்தில் கொண்டு அமைந்தால் நாட்டில் தொடர்ந்தும் குழப்பங்கள் உருவாக வாய்ப்புண்டு.

எனவே அரசியல் அமைப்பினை மாற்றும் பொறுப்பு சுதந்தரமான ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட வேண்டும் இவ் ஆணைக்குழு நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சி கள்,சமூக அமைப்புகள், புத்திஜீவிகள் ஆகியோருடைய ஆலோசனைகளைப் பெற்றே தனது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இதன்மூலம் ஒரு அங்கமாக தமிழ் மக்களின் பிரதிநிதி களாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் ஆலோச னைகள் பெறுவதுடன் அரசியல் அமைப்பு மாற்றத்தின் போது அவர்கள் சமபங்களிககக் கூடிய சந்தர்ப்பத்தையும் அரசு வழங்குவது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4,63)

### அரசு-புலிகளுக்கு இடையிலான

# பேச்சுவார்த்தை குறித்த அறிக்கை தயாரிப்பதில் நோர்வே தீவிரம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எங்கே, எப்போது ஆரம்பிப பது என்பன தொடர்பான அறிக்கையைத் தயாரிக்கும் தீவிர ஆலோசனைகளில் நோர்வே அரசு ஈடுபட்டு வருகின்றது.

இது தொடர்பில் சில விடயங்களில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கபபட வேண்டியுள்ளதால் இலங்கை அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் நோர்வே அரசு தொடர்புகளை ஏற் படுத்திக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கை ஓரிரு தினங்களிலோ அல்லது ஓரிரு வாரங் களிலோ பூர்த்தியாகுமென்று எதிர்பார்க்க முடியாது. எனினும் நோர்வேயின் கோடை கால ஆரம்பத்தில் இந்த அறிக்கை வெளி யிடப்படுமென்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ பிறஸகர் தன்னுடனான சந்திப்பின் போது தெரி வித்ததாக ஜப் பானின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் அந்த நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளில் எந்தவித மாற்றமும் ஏற்படப்போவதில்லையென்று இலங் கைககான இந்தியத் தூதுவர் நிருபம் சென் தன்னிடம் தெரி வித்ததாகவும்,

இலங்கையின் சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகிய னவற்றில் இந்தியா அக்கறை கொண்டுள்ளதாக அவர் கூறியதாகவும் அகாஷி மேலும் குறிப்பிட்டுள்ளார். (18)

# கோதுமை மா, சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு விரைவில் நிறுத்தப்படும்

### அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

கோதுமை மா சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை அதிகரிப்பால் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் குறைப் பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சர வைப்பேச்சாளருமான ரெஜினோல்ட் கூரே கருத்துத் தெரிவிக் கையில், கோதுமை மா மற்றும் எரிபொருளின் விலைகள் கட்டுப்பாட்டில் உள்ளதை உறுதி செய்வதற்காக இரண்டு குழுக்களை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதேவேளை, அரிசி இறக்குமதி தொடர்பான ஏகபோக உரிமை பிறிமா நிறுவனத்தை சார்ந்திருக்கின்றது. முன் னாள ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட் சிக் காலததில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை காரண மாக பிறிமா நிறுவனத்தின் அனுமதியில்லாமல் வெளிநாட்டில இருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்யமுடியாது.

இதனால் இந்த உடன்படிக்கையை மாற்றி அமைக்க வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டிருக்கின்றது. இதற் கிடையில் சமையல் எரிவாயுவின் விலையை ஒரே மட் டத்தில் பேணும் வண்ணம் காஸ் விநியோகத்தில் வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்பைப்பெறும் சாத்தியக் கூறு கள், பற்றி ஆராயப்படவுள்ளன. அத்துடன் உலக சந்தை யில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்திருப்பதால் சமை யல எரிவாயுவின் விலையை 64 ரூபாவால் உயர்த்த வேண்டும் என்ற காஸ் நிறுவனங்களின் கோரிக்கையை யும் அரசாங்கம் நிராகரித்துள்ளது என்றும் அமைச்சர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார். (60,10)

ஓம் தினசரி தியானம்

**விவேகச் சிந்தனைகள்**

நாம் பேசும் வார்த்தைகளும், வீட்டில் ஒலிக்கும் ஒலிகளும் வீட்டின் சுற்றுப்புறத்தைப் பாதிக்கிறது. அவை நம் மனதையும் உடல் நலத்தையும் பாதிக்கிறது. இது விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும். எனவே சுற்றுப் புறம் தூய்மையாக இருக்க தூய ஒலிகள் மட்டுமே வீட்டில் ஒலிக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

# இலங்கை பிளவு படுவதை ஒருபோதும் அனுமதியோம்

## மணிசங்கர ஐயர் பேட்டி

(புதுடில்லி)

இலங்கை துண்டாடப்பட்டு தனி ஈழம் அமைக்கப்படுவதற்கு நாம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம். எனினும் இலங்கையில் தமிழர்கள் எங்கெல்லாம் இருக்கி றார்களோ அவர்களது மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளோம். இவ்வாறு தமிழ் நாடு காங்கிரஸ் பிரமுகரும், எம்.பியுமான மணிசங்கர ஐயர் பி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சிறபான்மை தமிழ் மக்களை பாதிக்கக்கூடிய 13வது சரத்தை நீக்குவதற்கு நாமே ஆலோசனை வழங்கியிருந்தோம். அதன் அடிப் படையில் 13வது சரத்தில் மாற்றத்தை அரசாங்கம் செய்திருந்தது.

தமிழ் மக்களின் பொருளாதாரம், கல்வி, கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சியில் எந்தவிதமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தக் கூடாது என்று நாம் கூறி வருகின்றோம். இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்க ளில் இந்தியா ஒருபோதும் நேரடி யாகத் தலையிடமாட்டாது. இலங்கை யின் அழைப்பு கிடைக்கும் பட்சத்தில் சமாதானப் பேச்சுக்க ளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். இதற்கு நாம் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்.

இந்திய - இலங்கை பாலம் அமைப்பது தொடர்பாகவும், இந்திய இலங்கை பாதுகாப்பு தொடர்பாகவும் முன்னைய அரசு என்ன பேசிய தென்பது எமக்குத் தெரியாது.

இது தொடர்பாக அவர்கள் இரகசியமாகப் பேசி இருப்பார்கள். இவை பற்றி பத்திரிகைகளில் மட்டுமே பார்த்திருக்கிறோம். இது பற்றி எமது அமைச்சர் கோவைகளை படித்துப் பார்த்து வேண்டியதைச் செய்வார்.

இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் எனக்கும் நீண்ட காலமாக தனிப்பட்ட தொடர்புகளும் நட்பும் உண்டு.

இப்பொழுது நாம் ஆட்சிக்கு வந்துள்ளோம். இனிமேல் தான் அவர்களுடன் பேசவுள்ளோம். அதன் பின்னரே எடுக்கக்கூடிய நட வடிக்கைகள் பற்றி பேச முடியும் என்று மணிசங்கர ஐயர் அப் பேட்டியில தெரிவித்துள்ளார் (ம)

# இலங்கையின் அபிவிருத்திக்கு 100 கோடி அமெ. டொலர்கள்

### ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகிறது

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் ஆசிய அபி விருத்தி வங்கி நூறு கோடி டொலரை நன் கொடையாக வழங்க இணங் கியுள்ளது.

தென் கொரியாவில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாட்டியேலயே நிதி யுதவி வழங்குவது தொடர்பான இவ் இணக்கப்பாடு ஏற்பட்டதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரி வித்தார்.

வெளிநாட்டு உதவிகளைச் சிறந்த முறையில் அபிவிருத்திக்குப் பயன் படுத்துவதே இலங்கை அரசாங் கத்தின் நோக்கமெனவும் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி களிடம் சரத் அமுனுகம தெரிவித் துள்ளார். (ச)

# களுத்துறை சிறைக் கைதிகள் உண்ணாவிரதத்திற்கு முஸ்தீபு

(களுத்துறை)

களுத்துறை ஜாவத்தைச் சிறைச் சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தாம் மீண்டும் உண்ணா விரதத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

களுத்துறைச் சிறையில் சுமார் 40 தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப் படாமல் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நீண்டகாலமாக தடு த்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் தமது விடுதலைக்காக கடந்த காலங்களில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த போதிலும் எவரும் தமது விடுதலைக்காக ஆக்க பூர் வமான செயற்பாடுகளை எடுக்காத படியால் மீண்டும் உண்ணாவிரத த்தில் ஈடுபடப்போவதாக அறிவித் துள்ளனர்.

தமது விடுதலைக்காக ஆக்க பூர்வமான செயற்பாடுகளை உட னடியாக எடுக்குமாறு தமிழ் நாடா ளுமன்ற உறுப்பினர்களையும் தமிழர் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று மறை மாவட்ட ஆயர்களையும் கைதிகள் கேட்டுள்ளனர்.(த-121)

# பிக்குகள் என்னைக் கடத்தவுமில்லை யாராலும் நான் தாக்கப்படவுமில்லை

### செய்தியாளர் மத்தியில் ஹெல உறுமயவின் முன்னாள் எம்.பி. ரத்னசீல தேரர்

(கொழும்பு)

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் ஹெல உறுமயவின் சார்ச்சைக் குரிய வண.கதலுவே ரத்னசீல தேரர் தான் கடத்தப்படவுமில்லை. தாக்கப்படவுமில்லை, எனத் தெரி வித்திருக்கிறார். பனனப்பிட்டியவி லுள்ள விகாரையில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தான் கடத்தப்படவுமில்லை. பிக்குகளே என்னை இங்கு கூட்டி வநதுள்ளனர். இது எனக்குப் புதிய இடமில்லை. நான் இங்கு வருவரு வதற்கு யாரும் கட்டாயப்படுத்த வில்லை எனது சொந்த விருப்பிலேயே. இங்கு வந்தேன். சில பாரியளவான அழுத்தங்கள் காரணமாகவே எம்.பி. பதவியை இராஜிநாமாச் செய்தேன். அரசியலில் இருந்து ஓதுங்கியிருக்க விரும்புகின்றேன். நான் யாராலும் ஒருபோதும் தாக்கப்படவில்லை. என் விவகாரம் பற்றி எந்த விசா ரணைகளும் தேவையில்லை. இச் சம்பவம் பற்றி பேசவும் தேவை யிலலை. இவ்வாறு அத்தேரர் தெரி வித்தார்.

இதேவேளை, தேரர் கடத்தப் பட்டதற்கு தன்னை குற்றஞ்சாட்டு வது தவறு இதனை ஜே.வி.பியி னரே மேற் கொண்டுவருகிறார்கள் எனகட்சியன் தேசிய அமைப்பாளர் வண.கொலன்னாவே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.மேலும் கடநத 18ஆம் திகதியன்று பாராளு மன்றில் ஜே.வி.பியினர் நடந்து கொண்ட விதம் அதிர்ச்சி தருவ தாக உள்ளது. என்னை அவர்கள் தேவதத்தன் என பழிகூறினர். நான் எதற்காக பிக்குவை கடத்த வேண்டும்?, இந்த விகாரையின் பிரதமகுரு நான்தான். ரத்ன சீல தேரர் பிரதிக் குரு. நான் ஏன் அவரைக் கடத்த வேண்டும் எனக் கொலன்னாவே சுமந்கல தேரர் கேள்வி எழுப்பினார். (த-6)

# எம்.பிகளின் ஒழுக்கம் பற்றி விவாதிக்க சபாநாயகர் முடிவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் களின் ஒழுக்கம் பற்றி கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் விவாதிப்பதாக சபாநாயகர் உறுதியளித்துள்ளார். அரசாங்கத் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் கள் சிலர் தொடர்ச்சியாக சபை அமர்வுகளைக் குழப்பும் நடவ டிக்கைகளில் ஈடுபட்டு வருகி ன்றனர்.

சபை முதல்வருக்கு மதிப்பளிக் காமல் நடந்து வருவது குறித்துக் கருத்துத் தெரிவித்த சபாநாயகர் அரச தரப்பு எம்.பிக்கள் தமது தரப்பு உறுப்பினர்களைக் கூட பேச விடாது தொந்தரவு செய்கின்றனர் எனக் கூறினார்.

இதேவேளை அரச தரப்பு எம்.பி க்கள் எதிர்க் கட்சி உறுப்பினர்க ளைப் பேசவிடாது குறிப்பாக ஹெல உறுமய உறுப்பினர்களைப் பேசவிடாது தொந்தரவு செய்வ தாக எதிர்க்கட்சியின் பிரதான கொறடா மகிந்த சமரசிங்க சபை யில் முறையிட்டுள்ளார்.

அரச தரப்பு எம்.பிக்கள் பேசும் போது கூட பாராளுமன்ற உறுப்பினர்களான மேர்வின் சில்வா, ஸ்ரீபதி சூரியராய்ச்சி ஆகிய இருவரும் நாகரிகமற்ற முறையில் சபையில் கூச்சல் போட்டனர். சரத் அமுனுகமவைக் கூட சபையில் அவர்கள் பேசவிட வில்லை.

இதேவேளை பாராளுமன்ற நிகழ்வுகளை கலரிப் பகுதியில் இருந்து அமைதியாகக் கவனித்துக் கொண்டிருக்கும் பள்ளிக்கூட மாணவர்களைச் சுட்டிக்காட்டி அவர் களைப் பார்த்தாவது பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும் என ஹெல உறு மய எம்.பி.ஓமல்கே சோபித தேரர் கூறினார். (த-6)

## தமிழ்மக்களின் ஏகப்பிரதி...

நிலைப்பாடு முற்றிலும் தவறானது. நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் பேச்சு வார்த்தையின் பங்குதாரர்கள் தான்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் விடுதலைப் புலிகள் அரசாங்கத்துக்கு நிபந்தனை விதி க்க முடியாது.ஆனால் அரசாங்கம் விதிக்கும் நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றே ஆக வேண்டும். ஏனெனில் பெரும்பான்மைப்பலம் கொண்ட அரசின் ஆட்சிக்கு உலக நாடுகளின் ஆதரவு உள்ளன. அந்த வகையில் பெரும்பான் மைப் பலம் கொண்ட அரசாங்கம் ஒன்றின் நிபந்தனைகளை சிறு இயக்கம் ஒன்று எவ்வாறு நிரா கரிக்க முடியும்? என்றார்.

இதேவேளை ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலா ளரும், பாராளுமன்ற உறுப்பின ருமான விமல் வீரவன்ச கருத்து வெளியிடுகையில்,

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஐக் கிய மக்கள் சுதந்திர கூட்டமைப் பில் இணைந்து கொள்வதற்காக ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் செய்து கொண்ட உடன் படிக்கையை மீறும் வகையில் விடு தலைப் புலிகளுடனான சமாதானச் செயற்பாடுகள் அமையவில்லை.

போரின் மூலம் தீர்த்துக் கொள் ளப்பட முடியாத இனப்பிரச்சினை யை சமாதானச் செயற்பாடுகளின் மூலமே தீர்த்துக் கொள்ள முடி யும் என ஜே.வி.பி நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (த-121)

## பிரதமருடனும்...

பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் கூறியிருக்கிறார்.

இதேவேளை ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச் சருமான டக்ளஸ் தேவானந் தாவையும் சோமவன்ச அமரசிங் நேற்று சந்தித்துப் பேசியுள்ளார். (த)

## ஐ.நா.பொதுக்..

மகேந்திரனே காரணமென ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கா குற் றஞ்சாட்டியிருந்தார்.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் சார்லி மகேந்திரன் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதி நிதிப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-18)

## பறப்பில்...

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானங்கள் எதுவும் முல்லைத்தீவு கடற்பரப்பில் பறக்க வில்லை. இதனை இலங்கை விமா னப்படை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

அயல்நாட்டு விமானங்கள் எது வும் இலங்கையின் வான்பரப்பு எல் லைக்குள் அந்த நேரம் பறந்து செல்லவில்லை. அதன் அடிப்படை யில் ஆராய்ந்து பார்த்தால் விடு தலைப் புலிகள் விமானப் பயிற் சியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு பிடிக்க முடிந்துள்ளதாகக் கடற் படை வட்டாரங்கள் தகவல் வெளி யிட்டுள்ளன.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விமானம் இருப்பதாக வும் இவ்விமானத்திற்கான விமா னத் தளம் இரணைமடுவுக்குக் கிழக்காக அமைந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகளிடம் தெரிவிக் குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கண்காணிப்புக்குழு வின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்பியுறு ஹெவ்டேயிடம் அண் மையில் தெரிவித்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செய லாளர் தெரிவித்த கருத்தைக் கண் காணிப்புக்குழுத் தலைவர் விடு தலைப புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வ னுடனான சந்திப்பின் போது கூறி யிருந்தார்.

அதற்குப் பதில் அளித்த தமிழ்ச் செல்வன் எம்மிடம் விமானத் தளம் இருப்பதை அரசாங்கம் உத்தியோக பூர்வமாகத் தெரிவித்தமைக்கு நன்றி கூறுமாறு தெரிவித்திருந் தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, விடுதலைப் புலி கள் ஏதோவொரு ரக விமானம் வைத்திருக்கின்றனர் என தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக அரச புலனாய்வு அதிகாரியொருவர் கூறி யிருக்கிறார். (த-6)

## நாட்டில்......

தெரிவிக்கையில்;

கடந்த ஐக்கிய தேசிய முன் னணி ஆட்சிக் காலத்தில் நடை பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை களின் போது தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் தயாராகவுள் ளனர்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்றை அடையும் வகையிலான பேச்சுக்களை ஆரம் பிக்க விரும்பம் கொண்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பலம் பொருந்திய இராணுவக் கட்டமைப் பைமாத்திரம் கொண்டிருக்கவில்லை. அவர்கள் திறமையான நிர்வாகக் கட்டமைப்பையும் கொண்டுள்ளனர். இந் நிலையில் இடைக்காலத் தன் னாட்சி அதிகாரம் ஒன்றின் மூலம் வடக்குக்கிழக்கில் அவர்களால் மட்டுமே மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்த பின்னர் ஐரோப்பிய அரசியல் அமைப்புச் சட்ட நிபு ணர்களையும்,ஆலோசகர்களையும் அணுகி கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு நாம் ஏற்பாடு களைச் செய்து வருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்புக் காரணங்களுக்கா கவே சமாதானப் பேச்சுவார்த்தை களை வெளிநாடுகளில் நடத்த வேண்டுமென்று அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் சிறு பான்மை அரசாங்கம் சிங்களத் தீவிரவாத தேசியக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்தாலும் 2002ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய முன் னணி அரசு விடுலைப் புலிகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை மதித்து உரிய முறையில் கடைப்பிடித்து வருகிறது. இந்நிலையில் சிங்களப் பேரின வாதிகளின் பிரச்சினை களை அரசாங்கம் தீர்த்துவைக்க வேண்டும். சிங்களப் பேரினவா திகள் எதிர்பார்ப்பது போல தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டார் கள்.

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் நம்பிக்கை கொண் டுள்ளார்கள் என்றும் தெரிவித்த புலித்தேவன் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் விரைவில் இலங்கைக்கு வந்து சமாதானப் பேச்சுக்களை ஆரமபிப்பது தொடர்பான நடவடிக் கைகளை எடுப்பாரென்றும் தெரி வித்தார். (ம-60,10)

## போராளிகள்..

சூரி (நாகேந்திரன் கமலேந்திரன், இல.338பிரதான வீதி, கொழும்புத் துறை), கடற் கரும்புலி மேஜர் அச்சுதன் அல்லது வாதீசன் ( கொக்கு வில் கிழக்கு, கொக்குவில்), கடற்கரும்புலி மேஜர் அறிவுச் செல்வன் அல்லது வசந்தன் (வைர முத்து வினோகரன் உமையாள் புரம ஆனையிறவு) ஆகிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாவர். (ச)

## திசைமாறிய..

கவும் தனது பயண இலக்கை இரத்துச்செய்த இக் கப்பல் மீண்டும் மலேசியா நோக்கிச் சென்று கொண் டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (முன்னர் வந்த செய்தி-8ஆம் பக்கத்தில்) (த-4,60)


### பயிலுநர்கள் தேவை

- ஓவ்செற் மெசின் பயிலுநர்கள் (ஆண்கள்) (யாழ் நகர மையத்திலிருந்து 10 km தூரத்துக்குள் வசிப்பவர்கள் மாத்திரம்)
- 24.05.2004 (திங்கள்) அன்று காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்

நிர்வாக உத்தியோகத்தர்

வலம்புரி
15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.